மலர்-4 இதழ்-93 ஜூலை 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



கொரனாவின் ஆட்டம் எப்போது அடங்கும்

e- book

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play

வாழைப்பழ கதை

## திருச்செந்தூரில் உற்சவராக வலம்வரும் கேரளத்து முருகன்

# நவக்கிரக பைரவர்களும் உபசக்திகளும்



இன்ப துன்பம் என்பது ஒவ்வொருவரின் ஜாதகத்திற்குரிய பலன்களாலும், அவர்களின் முன்னோர்களின் செயல்களாலும், ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களும் கண்டிப்பாக அனுபவிக்க வேண்டிய, இறை நிலையை அடைய உதவும் தடகளப் போட்டியாகும்.

கடுமையான தோஷங்கள், பரிகாரங்கள், பலன்கள், கிரக தோஷம், ஜாதக தோஷம், போன்ற கொடிய தடைகளை ஒன்பது விதமான பைரவ வழிபாடுகள் மூலம் பரிகாரங்களாக செய்யலாம் என்று ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. அந்த ஒன்பது பைரவர்களைப் பற்றி பார்ப்போம்.

### நவக்கிரக பைரவர்களும் உபசக்திகளும்

| நவ கிரகங்கள் | பிராண பைரவர் | பைரவரின் உபசக்தி |
|---|---|---|
| சூரியன் | சுவர்ணாகர்ஷண பைரவர் | பைரவி |
| சந்திரன் | கபால பைரவர் | இந்திராணி |
| செவ்வாய் | சண்ட பைரவர் | கௌமாரி |
| புதன் | உன்மத்த பைரவர் | வராஹி |
| குரு | அசிதாங்க பைரவர் | பிராமஹி |
| சுக்கிரன் | ருரு பைரவர் | மகேஸ்வரி |
| சனி | குரோதன பைரவர் | வைஷ்ணவி |
| ராகு | சம்ஹார பைரவர் | சண்டிகை |
| கேது | பீஷண பைரவர் | சாமுண்டி |

## அன்னையின் பாசம் தந்தையின் ஞானம் பெற்ற
# பரமார்த்த குரு ஸ்ரீ தத்தாத்ரேயர்

மும்மூர்த்திகளின் அம்சமும் கொண்ட தத்தாத்ரேயர் அத்ரி அநசூயை தம்பதிகளிடம் வளர்ந்தார்.

அன்னையின் பாசம் முழுக்கப் பெற்றார். தந்தையின் ஞானம் அனைத்தையும் பெற்றார்.

உலகில் உள்ள அனைத்துக் கலைகளையும் கற்று, பெரும் ஞானவான் ஆனார். ஸ்ரீ வித்யா உபாஸகர்களுக்கு, சாக்த உபாஸகர்களுக்கு தத்தாத்ரேயர் தான் பரமார்த்த குரு.

ஏனெனில், தாயைப் போற்றும், தெய்வத்தைத் தாய் நிலையில் கொண்டு போற்றும், உலகமனைத்தையும் ஈன்றெடுத்த அன்னையைப் போற்றும் வகையில் அமைந்த ஸ்ரீ வித்யா உபாஸனையை உலகுக்குக் கொண்டுவந்தவர் தத்தாத்ரேயர்தான்.



தத்தாத்ரேயருக்கு பரம ஞான சக்தியாக விளங்குவது ஸாக்ஷன்த் ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரியே தான். தத்தாத்ரேயர் ஸ்ரீ புர உபாஸனை அல்லது ஸ்ரீ நகர பூஜை அல்லது ஸ்ரீ வித்யா தந்திரத்தை 18,000 ஸ்லோகங்களில் மிக விரிவாக வடித்தார்.

அதுவே தத்த ஸம்ஹிதை எனப் போற்றப்பட்டது.

தத்தாத்ரேயரின் பிரதான சிஷ்யராக விளங்கியவர் பரசுராமர். இந்த பரசுராமர் தத்த ஸம்ஹிதையை 6.000 ஸ்தோத்திரங்களாக தொகுத்தார். அதுவே பரசுராம கல்பம் எனப்பட்டது. தற்காலத்தில் அம்பிகைக்கு செய்யப்படும் அனைத்து பூஜைகளும் பரசுராம கல்பத்தை ஒட்டியே செய்யப்படுகின்றது.



# ஆன்மிக கருவியாக செயல்புரியும் தண்டம்

முனிவர்களும் சித்தர்களும் எப்போதும் தங்கள் கையில் ஒரு தண்டம் வைத்திருப் பார்கள்.

"தண்டம்" என்பது மரத்தால் ஆன ஒரு ஊன்றுகோல். அந்தத் தண்டத்தின் மீது வலது கை அல்லது இடது கையை வைத்து விட்டால், சுவாசம் திசை மாறும்.

வலது நாசி சுவாசத்தை நிறுத்த, வலது அக்குளின் கீழே தண்டத்தை வைத்து அழுத்த வேண்டும். உடனே, இடது நாசிக்கு சுவாசம் தடம் மாறும். இடது நாசி சுவாசத்தை நிறுத்த, இடது அக்குளின் கீழே தண்டத்தை வைத்து அழுத்த வேண்டும். அப்போது வலது நாசிக்கு சுவாசம் தடம் மாறும்.

இது தான் தண்டத்தின் பயன்.

நம் முனிவர்கள் இதற்காக தான் தண்டத்தை சுமந்து கொண்டே திரிந்தார்கள்.

ஆனால், சுவாசத்தை எதற்காக தடம் மாற்ற வென்றும்?

எப்போது தடம் மாற்ற வேண்டும்?

அதாவது, நாம் செய்த காரியம் சரியாக நடக்கவில்லை என்றால், அப்போது எந்த நாசியில் சுவாசம் ஓடுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். உடனே, தண்டத்தை எடுத்து சுவாசம் ஓடும் அந்த நாசிப் பகுதியின் அடியில் வைக்க வேண்டும். உடனே, சுவாசத்தின் தடம் மாறிவிடும். இந்த நிலையில், மீண்டும் அந்த காரியத்தை முயற்சிக்கும் பொது, அதுவரை நடக்காமல் இருந்த காரியம் நடந்துவிடும். நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிடும்.

துன்பத்தை இன்பமாக மாற்ற இந்த தண்டம் ஒரு அழகான ஆன்மீகக் கருவி. விதியை மாற்றுவது போன்றது இது.

# ஆன்மிக மலர்கள்



- இலையைத் துடைத்து வலித்துச் சாப்பிடுவதும் விரலில் ஒட்டி உள்ளதை சப்பிச் சாப்பிடுவதும் தரித்திரத்தை வளர்க்கும்;.
- நாம் சாப்பிட்ட தட்டுக்களை வைத்து சாப்பாட்டையோ அல்லது மற்ற உணவுப் பதார்த்தங்களையோ மூடி வைக்கக்கூடாது.
- இரவில் இஞ்சி, கீரை, பாகற்காய், கஞ்சி, தயிர், நெல்லிக்காய்; ஆகியவற்றை சேர்க்கக் கூடாது.
- நம்மை விடப் பெரியவர்கள் முன் கால் மேல் கால் போட்டு அமரக் கூடாது.
- நான்காம் பிறைச் சந்திரனைப் பார்க்கக் கூடாது.
- செப்புப் பாத்திரத்தில் பாலை வைக்கக் கூடாது. பால் திரிந்து விடும்.
- பட்டு வேட்டி மற்றும் புடவைகளை அணிந்துக் கொண்டு வைதீக காரியங்களைச் செய்யக் கூடாது.
- மருந்து மாத்திரை ஆகியவற்றை முகர்ந்து பார்க்கக் கூடாது.
- பெருமூச்சு விடுவது மிகப் பெரும் தவறு அதனால் துன்பங்கள் தான் அதிகரிக்கும் பெருமூச்சு விடுபவரின் மூச்சுக் காற்று அருகில் உள்ளவர் மேல் படக் கூடாது. பட்டால் அவருக்கும் கெடுதல் ஏற்படும்.
- இலவசமாக யாரிடமும் எள் பெறக் கூடாது.
- நமக்கு ஒருவர் இட்ட உணவைப் பழிக்கக் கூடாது.
- வீட்டில் எலுமிச்சை மூடியில் விளக்கேற்றக் கூடாது.
- விளக்கில் அல்லது நெருப்பில் தீப்பற்றிய துணியை மீண்டும் உடுத்திக் கொள்ளக் கூடாது.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# பல்வேறு வரலாறு கொண்ட

# திருச்செந்தூர் முருகன்



## திருச்செந்தூராக மாறிய திருஜெயந்திபுரம்

## கேரளாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உற்சவர் சிலை

## புளித்த தோசை, கஞ்சி படையலின் ரகசியம்

## தொழிலை பெருக்கி பங்குதாரராகும் முருகன்

ஆறுபடை வீடுகொண்ட தமிழ்க்கடவுளான முருகப்பெருமானுக்கு மிகவும் பிடித்த தலம் திருச்செந்தூர், மற்ற ஐந்து தலங்களும் மலைமீது குன்றின் மீது இருக்கும்போது, திருச்செந்தூர் திருத்தலம் மட்டும் கடற்கரையோரம் அமைந்துள்ளது.

திருச்செந்தூர் திருத்தலத்திற்கு ஜெயந்திபுரம் என்ற ஒரு பெயர் உண்டு. முருகப்பெருமானுக்கு ஜெயந்திநாதர் என்ற பெயரும் உண்டு.

இந்தப் பெயர் ஏற்பட்ட காரணத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

தேவர்கள் தங்களை தொந்தரவு செய்த, சூரபத்மனை அழிக்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களது வேண்டுதலை ஏற்ற சிவன், தன் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினார். அதிலிருந்து முருகப்பெருமான் தோன்றினார்.

பின், சிவபெருமானின் கட்டளையை ஏற்று, சூரபத்மனை அழிக்க இங்கு வந்தார். இவ் வேளையில் முருகப்பெருமானின் தரிசனம்









வேண்டி, தேவர்களின் குருவான வியாழ பகவான் இத்தலத்தில் தவமிருந்தார். அவருக்கு காட்சி தந்த முருகப்பெருமான், இவ்விடத்தில் தங்கினார்.

அவர் மூலமாக அசுரர்களின் வரலாறையும் தெரிந்து கொண்டார். அப்போது தனது படைத் தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூது அனுப்பினார். அவன் கேட்கவில்லை. பின்பு, முருகன் தன் படைகளுடன் சென்று, அவனை வதம் செய்தார். வியாழ பகவான், முருகனிடம் தனக்கு காட்சி தந்த இவ்விடத்தில் எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார்.

அதன்படியே முருகனும் இங்கே தங்கினார். பின்பு, வியாழ பகவான் விஸ்வகர்மாவை அழைத்து, இங்கு கோயில் எழுப்பினார். முருகன், சூரனை வெற்றி பெற்று ஆட்கொண்டதால் இவர், "செயந்திநாதர்' என அழைக்கப்பெற்றார். பிற்காலத்தில் இப்பெயரே "செந்தில்நாதர்' என மருவியது. தலமும் "திருஜெயந்திபுரம்' (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, தற்போது "திருச்செந்தூர்' என மருவியுள்ளது.

தற்போது இத்தலத்தில் வீற்றிருக்கும் உற்சவ முருகப் பெருமான் சிலை கேரள மாநிலம் திரு வனந்தபுரத்திலிருந்து, முருகனின் கட்டளைப்படி எடுத்துவரப்பட்டதாக கூறப்படுகிறது.

திருவனந்தபுரத்தில் மார்த்தாண்ட மகாராஜா அரசாண்ட சமயம்...

திருச்செந்தூர் திரிசுதந்திர முக்காணி பிராமணர்களுக்கும் திருவனந்தபுரம் முக்காணி பிராமணர்களுக்கும் பெண் கொடுக்கல் வாங்கல் சம்பந்தம் உண்டு.

அந்த சமயம் திருசுதந்திரர்கள் திருவனந்தபுரத்தில் சண்முகரை அங்கு கண்டனர்.

உடனே இதை எப்படியாவது நம் திருச்செந்தூர் செயந்திநாதர் ஆலயத்திற்க்கு எடுத்து வந்து உற்சவமூர்த்தியாக ஆக்க வேண்டும் என்று எண்ணினர்.

இதற்கான உத்தரவு இறைவனிடமிருந்து அசரிரீயாக கேட்டது.

உடனே காரியத்தில் இறங்கினர்.

திருவனந்தபுரத்தில் வியாபாரத்தில் மிகவும் செல்வாக்கு பெற்ற சமுதாயம் பரக்க செட்டிமார் சமுதாயம். அவர்களிடம் இறைவனின் அசரீரி பற்றி கூறினர். அவர்களும் மகிழ்வுடன் உதவ முன் வந்தனர்.

ஓர் இரவு சண்முகரின் விருப்பதிற்கிணங்க முருகரை எடுத்து இரவோடு இரவாக ஒரு மூங்கில் கம்பில் துணியை கட்டி ஊஞ்சல் பல்லக்கு செய்து அதில் சண்முகரை கிடத்தி, துணியை வைத்து மூடி திருச்செந்தூரை நோக்கி புறப்படலாயினர் திரிசுதந்திர்களும், பரக்கசெட்டிமார்களும். வழியில் திருவிதாங்கூர் எல்லையில் காவலர்கள் தடுத்தனர்.

அவர்களிடம் "குழந்தைக்கு அம்மை போட்டு இருக்கிறது அதனால் பாண்டி நாட்டுக்கு வைத்தியம் பாக்க கொண்டு போகிறோம்" என்று சொல்கின்றனர்.

அம்மை என்ற உடன் காவலர்கள் திறந்து பார்க்க கூட அச்சப்பட்டு அவர்களை அனுப்பி விடுகின்றனர். அவர்கள் நடக்கலாயினர்.

அதற்குள் சிலையை காணவில்லை என்று திருவனந்தபுரத்தில் மார்த்தாண்ட மகாராஜா அரண்மனையில் ஒரே களேபரம்.

மார்த்தாண்ட மகாராஜா கடும் கோபம் ஆகிறார் நாலாபுறமும் தேட ஆணை பிறப்பிகிறார்.

அன்று இரவு மகாராஜா கனவில் சண்முகர் வந்து என் குழந்தைகள் என்னை சரியான இடத்திற்கு அழைத்து செல்கிறார்கள். அதுவே என் ஆசை. நீ பதட்டப்பட வேண்டாம்.

என்னைக் காண இனி திருச்செந்தூர் வா என்று கட்டளை இடுகிறார் முருக பெருமான்.

சண்முகரை சுமந்து செல்லும் அடியவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரும் பொழுது





www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

விடிந்து விடுகிறது.

அந்த இடத்தில் சண்முகருக்கு ஜல அபிஷேகம் செய்து சண்முகருக்கு பசிக்குமே நிவேதனம் செய்ய ஏதாவது கிடைக்குமா என்று தேடுகிறார்கள்.

அது ஒரு கடற்கரை ஒட்டிய வனாந்திர காடு அங்கு ஒரு குடிசையில் ஒரு வயதான பெண் வாழ்ந்து வருகிறாள்.

காலை உணவு தயாரிக்க புளித்த மாவும், பயறு கஞ்சியும் வைத்து இருக்கிறார்கள்.

சண்முகரின் அடியவர் கூட்டம் அந்த பெண்மணியிடமிருந்து அந்த புளித்தமாவு தோசையும் கஞ்சியையும் பெற்றனர்.

சண்முகருக்கு புளித்த தோசையும், கஞ்சியும் நிவேதமாக வைத்து பூஜை செய்கிறார்கள்.

அந்த நிவேதனம்தான் உதயமார்தாண்ட கட்டளையில் இன்று வரை ஒரு நாள் முன்பே அரைத்த புளித்த தோசை, பயறுகஞ்சி என சண்முக நிவேதனம்.



அந்த அம்மைத் தழும்புதான் இன்னும் உற்சவர் சண்முகர் முகத்தில் உள்ளது.

இந்த சமயத்தில் பாரத தேசத்தை சுரண்டி நாட்டை கொள்ளையடித்துக் கொண்டிருந்த வெள்ளைக்காரனுக்கு இணையாக டச்சுக்காரர்கள் படையினர் திருச்செந்தூர் முருகன் உற்சவரை திருடிச் சென்ற சமயத்தில் கடற்கரையில் ஏற்பட்ட புயலுக்கு பயந்து சிலைகளை கடலிலேயே போட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என்ற மரணபீ தியில் சென்றுவிட்டனர்.

முருகச் சிலை காணாததால் ஊரே பதைபதைத்தது.

அன்று வடமலையப்பர் பிள்ளை கனவில் முருக பெருமான், தான் கடலில் இருப்பதாகவும், தான் இருக்கும் இடத்தில் எலுமிச்சை பழம் மிதக்கும் என்று அசரீரியாக சொல்ல...

வடமலையப்ப பிள்ளை காயாமொழி ஆதித்தனிடம் சென்று முறையிட்டார். காயாமொழி ஆதித்தன் மீனவர்களை அழைத்துக் கொண்டு கடலுக்கு சென்ற போது கடலின் மேலே மிதக்கும் எலுமிச்சம் பழத்தை கண்டு அதற்கு கீழே போய் பார்க்க உத்தரவிட்டார்.

என்ன ஆச்சரியம் !

முருக பெருமான், நடராஜர் அனைத்தும் அப்படியே எடுத்து கடலில் கொண்டு வைக்கப்பட்டு மீண்டும் திருச்செந்தூர் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த சம்பவம்தான் காயாமொழி ஆதித்தன் மனதில் முருக பெருமான் மீது தீராத பாசத்தை ஏற்படுத்தியது. ஆதித்தமார்கள் நிலத்தில் எள் மானாவாரியாக விதைக்கப்பட்டது.

என்ன ஒரு ஆச்சரியம் !

ஒரு பங்கு கிடைக்கும் இடத்தில் 3 பங்கு எள் மகசூல் கிடைத்தது. அந்த பணத்தை வைத்தே காயாமொழி ஆதித்தர்கள் திருச்செந்தூர் கோயிலுக்கு தேர்கள் செய்து கோயிலுக்கு உபயமாக கொடுத்தனர்.

இதன் காரணமாகத்தான் இன்றும் புதிதாக தொழில் துவங்குபவர்கள், ஏற்கனவே தொழில் செய்பவர்கள் இத் தலத்து முருகனையும் தங்களது தொழிலில் ஒரு பங்குதாரராக இணைத்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு செய்வதால் தொழிலில் மிகுந்த லாபம் கிடைப்பதாகவும், அதில் முருகனுக்குரிய பங்கினை முறையாக திருச்செந்தூர் முருகனிடம் சமர்ப்பிப்பதாகவும் கூறுகின்றனர்.

ஒரே கோவிலில் பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க சம்பவங்கள் நடைபெற்ற தலங்கள் தமிழகத்தில் மட்டுமே உண்டு.

அந்தவகையில் திருச்செந்தூர் முருகனும் ஒரே தலத்தில் பல்வேறு வரலாற்று நிகழ்வையும் நிகழ்த்தியுள்ளார் முருகன்.





ஆச்சரியமான
உண்மை....
சந்தா இல்லை
நன்கொடை பெறுவதில்லை
விளம்பரங்கம் வாங்குவதில்லை
ஆனாலும் வெற்றிகரமாக
100வது இதழை நோக்கி
உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ-புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்
ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....
❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...

# முறத்தையும் சல்லடையையும் பாருங்கள் செயல்களை இறைவனிடம் விட்டுவிடுங்கள்

ஒரு செயலைச் செய்து முடிப்பதில் தீவிர முயற்சியும் சரியான திட்டமிடலும், செயல்பாட்டில் நேர்த்தியும் வந்துவிட்டால், நமது காரியம் யாவிலும் துணையிருந்து வெற்றியையே தேடித் தருவான் பகவான். சந்தேகமே இல்லை.

'செயலைச் செய்தது நான்தானே? அப்படி யெனில் பலனை உனக்கு ஏன் தரவேண்டும்' என்று அர்ஜுனன் கேட்டதற்கு பகவான் சொல்கிறார்

'நல்ல பலன் என்றால் எனக்குத் தந்துவிடு என்றா சொல்கிறேன். கெட்டதோ நல்லதோ பலன் எதுவாக இருந்தாலும், அதை என்னிடம் கொடுத்துவிடு என்கிறேன். இதில் என்ன தவறு அர்ஜுனா?

தவிர, இன்னொரு விஷயம். நீ சரீரன். உன்னால் மட்டுமே விளைந்தது இல்லை இது! ஐந்து பேர் ஒன்றுகூடவேண்டும்.

அதாவது ஆத்மா, தேகம், பஞ்சபூதங்கள், பரம்பொருள், இந்திரியங்கள் ஆகிய ஐந்தும் இணைந்தால் தான் செயலைத் திட்டமிடவோ, முனைப்புடன் செயல்படவோ முடியும். ஆகவே, செயலைச் செய்வது மட்டுமே உன் வேலை. அதில் எப்போதும் கவனம் செலுத்துவாயாக! பலனைப் பற்றி அலட்டிக் கொள்ளாதே!' என்கிறார் பரந்தாமன்.

அதாவது, 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர்.

எனவே, பலனை எதிர்பாராமல் கண்ணும் கருத்துமாக நமது கடமைகளைச் செய்து கொண்டே போவோம். அவற்றுக்கான பலன் நிச்சயம் நம்மை வந்து அடைந்தே தீரும்! ஒருசில காரியம் நல்லவற்றை தந்தாலும் தீயவற்றையும் ஒருசில செய ல்கள் தரத்தான் செய்யும் அதைப்பற்றி கவலைப் படக்கூடாது. இந்த விஷயத்தில் நாம் வீட்டில் பயன்படுத்தும் முறம் மற்றும் சல்லடைகளை



உதாரணமாக எடுத்துக் கொள்ளவேண்டும். பல்வேறு பிரச்சனைகள் மனித மனதை காயப் படுத்தாது, ஆசைப்பட வைக்காது, ஆசையால் விளையும் கெடு பலனும் ஏற்படாது.

முறம், சல்லடை இந்த இரண்டும் ஒரே விஷயத் தைத்தான் செய்கின்றன. ஆனால், அப்படிச் செய்வதில் இரண்டுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒரு பொருளைச் சல்லடையால் சலித்துப் பாருங்கள்;



அதையே முறத்தால் புடைத்துப் பாருங்கள்.

தேவையானது எதுவோ அது கீழே போய், கசடுகள் அனைத்தும் சல்லடைக்குள் தங்கி விடும். ஆனால், முறத்தில் ஒரு பொருளைப் போட்டுப் புடைத்தோமானால், தேவையற்ற பொருட்கள் எல்லாம் முறத்தில் இருந்து சட்சட்டென்று வெளியே தெறித்து விழுந்துவிடும்.



தேவையானவை எதுவோ அது அப்படியே முறத்தில் தங்கிவிடும். நல்ல விஷயங்களை உள்வாங்கிக் கொள்வதில் நாம் முறம் போல் இருக்கிறோமா, அல்லது சல்லடையாக இருக்கிறோமா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

இதை தீர்மானம் செய்யமுடியாத குழப்பத்தில் இருந்தால் அனைத்தும் இறைவனால் நடைபெறுகிறது என்று கிருஷ்ணர் கூறியது போல அனைத்திற்குமான பலனை இறைவனிடம் சமர்ப்பிக்கும் மன பக்குவத்தை அடைந்தாலே போதும் தான் என்ற எண்ணம் அகலும்.

## காஞ்சி வரதராஜபெருமாளின் மகிமையும் ஆச்சரியமும்!!

நமது இந்தியாவில் அந்நிய ஆங்கிலேயர் ஆட்சி நடந்த சமயத்தில் ஒருமுறை ராபர்ட் கிளைவ் ஆற்காடு நோக்கி பெரும் படையோடு சென்றான். வழியில் திடீர் என்று ஒரு பெரும் உடல் உபாதை ஏற்பட்டது.

இதனால் தன்னுடைய பயணத்தை நிறுத்திவிட்டு காஞ்சிபுரத்தில் தங்கினான்.

என்னடா இது, திடீர் என உடல் சரி இல்லாமல் போய்விட்டதே இப்போது ஆற்காடு வரை எப்படி செல்வது. ஆனால் நாம் அங்கு சென்றாக வேண்டுமே என்ன செய்வது என்று பெரும் சிந்தனையில் இருந்தான் ராபர்ட் கிளைவ்.

அப்போது அங்கு காஞ்சிபுரம் வரதராஜ பெருமாளின் திருத்தேர் உற்சவம் நடைபெற்றது.

அதை கண்ட ராபர்ட் கிளைவ், இது என்ன விஷேசம் என்று தன்னுடைய உதவியாளரை அனுப்பி விசாரித்து வர சொன்னான்.

வரதராஜ பெருமாளின் மகிமையை பற்றி அறிந்துவந்த உதவியாளர், அது பற்றி ராபர்ட் கிளைவிடம் தெளிவாக எடுத்துரைத்தான்.

உடனே ராபர்ட் கிளைவ், வரதராஜ பெருமாளை தரிசிக்க சென்றான். அப்போது தன்னுடைய உடல் உபாதை விரைவில் குணமடைய வேண்டும் என்று வேண்டினான்.

மறுநாளே ராபர்ட் கிளைவிற்கு நோய் நீங்கியது. அவன் தன் படையோடு ஆற்காடு சென்று வேலையே முடித்து மீண்டும் சென்னைக்கு திரும்பினான். வரும் வழியில் வரதராஜ பெருமாளுக்கு நன்றி செலுத்தும் வகையில் மரகத மாலை ஒன்றை அவருக்கு காணிக்கையாக செலுத்தினான்.

அப்போது பெருமாளுக்கு அர்ச்சகர் சாமரம் வீசுவதை கண்ட ராபர்ட் கிளைவ், பெருமாளுக்கு ஏன் விசுறுகிறீர்கள், பெருமாளுக்கு வியர்க்குமா என்று கேட்டான். அதற்கு பதிலளித்த அர்ச்சகர், இந்த பெருமாள் யாக குண்டத்தில் இருந்து பிறந்தவர் ஆகையால் அவருக்கு எப்போதும் வியர்க்கும் என்றார். அதோடு நிற்காமல் ஒரு துணியை எடுத்து பெருமாளின் நெற்றியில் ஒற்றி எடுத்தார்.

அந்த துணி ஈரமாக இருந்தது. இதை கண்ட ராபர்ட் கிளைவ் ஆச்சரியப்பட்டான்.

## யோகம், சித்துக்களை

# மந்திர தந்திரத்தால் அடையும் முறை

இறைவ வழிபாடுகளில் பல்வேறு வகைகள் இருந்தாலும், இறைவனை யந்திர வடிவில் வழிபடும் வழக்கம் நம்மிடையே காலம் காலமாய் இருந்து வருகிறது. இலங்கையில் கதிர்காமம் கோவிலில் மூலவர் யந்திரமாகவே இருக்கிறார்.

உலோகத் தகட்டில் கோடுகளாகவும், முக்கோணங்களாகவும் கீறப்படும் இந்த யந்திரங்கள் சூட்சுமமான பல அர்த்தங்களை தன்னகத்தே கொண்டவை. இந்த யந்திரங்களை உயிர்ப்பிக்க மந்திரங்கள் அவசியம் ஆகிறது.

மந்திரங்களினால் உயிர்ப்பிக்கப் படும் யந்திரங்கள் சக்தி கேந்திரமாய் விளங்குகின்றன. யந்திரம் மற்றும் அதை உயிர்ப்பிக்கும் மந்திரம் ஆகியவற்றை அறிந்து உணர்ந்து தெளிவதையே தந்திரம் என்கிறோம்.

இத்தகைய யந்திர வழிபாட்டினைப் பற்றிய தகவல்கள் சித்தர் பெருமக்களின் பாடல்களின் ஊடே கொட்டிக் கிடக்கின்றன. இவற்றில் ஒன்று தான் அகத்தியர் அருளிய "சண்முக யந்திரம்" பற்றிய தகவல் "அகத்தியர் 12,000" என்னும் நூலில் இருந்து சேகரிக்கப் பட்டது.

பாரப்பா சண்முகனார் பூசைகேளு
பத்தியுடன் முக்கோணம் பதிவாய்ச் செய்து
நேரப்பா அறுகோணந் தன்னிலேதான்
நிசமான ஓம்மென்றே நன்றாய்ப்போடு
காரப்பா அதனிடையின் வெளியிலேதான்
கருணையுடன் சரவணபவா வென்றேதான்
சேரப்பா அட்சரத்தை நாட்டிக்கொண்டு
சிவசிவா அதனைச் சுற்றி ஓம்போடே.

❖❖❖

போடப்பா சுற்றியே ஓங்காரம்போட
நன்மையுள்ள சக்கரமுஞ் சித்தியாச்சு
வீடப்பா பிலப்பதற்கு சக்கரத்தைச்சுத்தி
விருத்தமென்ற வளையமடா மூன்றுபோடு
கோடப்பா கீற நன்றாயக் கோட்டைபோட்டு
குறிப்பாக நால்வாச லிட்டுக்கேளே.

❖❖❖




கேளப்பா வாசலிற் தேவதையைக்கேளு
கீழ்வாசலில் பிரமனுட பீஷம்போடு
தாளப்பா தென்வாசல் மாலின்பீஷம்
தயவான மேல்வாசல் ருத்திரபீஷம்
வாளப்பா வடவாசல் மயேசன்பீஷம்
மைந்தனே வாசலிலே தேவதைகள்நாட்டி
ஆளப்பா சதாசிவன்போல் நீயிருந்துகொண்டு
அன்பாகச் சக்கரத்தைப் பூசைசெய்யே.

❖❖❖

செய்யப்பா பூசைவிதி தன்னைநன்றாய்
செப்பமுடன் செய்வதற்குத் திருவைநோக்கி
கையப்பா கால்முகங்கள் சுத்திசெய்து
கருரணைபெற விபூதியுத் தளமாய்ப்பூசி
வையப்பா சக்கரத்தைப் பீடமீதில்
மார்க்கமுடன் தானிருத்தி வைத்துமேதான்
மெய்யப்பா தூபமொடு தீபஞ்செய்து
வேதாந்தப் புருவமதில் சிம்மென்றுநில்லே.

❖❖❖

நில்லப்பா மனதறிவால் வணக்கமாக
நினைவாகப் சண்முகர்க்குப் பூசைசெய
சங்கையுடன் ஓம்கிலி சிம்மென்றோதே
ஒமெனவே சண்முகர்க்குப் பூசைசெய்து
சோல்லப்பா மூலமென்ற அக்கினியினாலே
சிவசிவா புருவநடுக் கமலம்நோக்கி
நல்லப்ப நல்மனதாய் நோக்கமானால்
நாதாந்த சண்முகனார் தெரிசனையாம்பாரு.

❖❖❖

பாரப்பா யோகபூசை அறிவானந்தம்
பதிவான தீபமென்ற மனக்கண்பார்வை
நேரப்பா வாசியென்ற அமுதபானம்
நிலையான பிர்மமாமாயே மாய்கைமாழும்
கருவான சூட்சமடா நாதவித்து
காத்து மனக்கண்ணாலே தன்னைக்காணே
அட்டாங்க யோகமுடன் மௌனயோகம்
அட்டசித்து னித்தனையு மறியலாச்சே.

❖❖❖

இந்த பாடலில் உள்ள குறிப்புகளின் படி வரைந்த யந்திரத்தின் படத்தினை அருகில் பாருங்கள், யந்திரங்களை கீறுவதற்கென தனித்துவமான சில முன்னெடுப்புகளும், முறைகளும் உண்டு. அதன்படியே அவற்றினை கீறிட வேண்டும்.

இந்த யந்திரத்தினை ஆறங்குல (6"x6") சதுரமான தங்கத்தால் ஆன தகட்டில் கீறிக் கொள்ளவேண்டும். இவ்வாறு கீறிய தகட்டினை, பீடம் ஒன்றில் பட்டுத் துணி விரித்து அதில் வைத்து செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமைகளில் பூசைகளை தொடங்க வேண்டுமாம்.

விளக்கேற்றி வைத்து, உடல் தூய்மை செய்து, திருநீறு அணிந்து சுகாசனத்தில் கிழக்கு முகமாய் அமர்ந்து மனதை ஒரு முக மாக்கி, குருவை பணிந்து "ஓம்கிலி சிம்" எனும் மந்திரத்தை 108 தடவைகள் செபித்து மலர் தூவி பூசைகளை செய்திட வேண்டுமாம்.

தொடர்ந்து இம்மாதிரி பூசை செய்து வந்தால் யோக பூசை, அறிவானந்தம், தீபம் என்ற மனக்கண் பார்வை, வாசி என்ற அமிர்த பானம், பிரம்ம மய நிலை, மாயை நீங்குதல், நாதவித்து சூட்சுமங்கள், மனக்கண்ணால் தன்னை அறிதல். அட்டாங்க யோகம், மௌன யோகம், அட்டமா சித்துக்கள் ஆகியவை சித்திக்கும் என்கிறார் அகத்தியர். ஆர்வமும், நம்பிக்கையும் உள்ளவர்கள் குருவினை பணிந்து வணங்கி முயற்சிக்கலாம்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# மாவீரன் சாத்யகி

சாத்யகி மகாபாரதத்தின் கதைமாந்தர்களுள் ஒருவன். பெரும்பாலும் பலர் அறிந்திடாத மற்றும் அறிந்துக்கொள்ள கூடிய மாவீரன். யுயுதனன் என்றும் அழைக்கப்படும் இவன் கண்ணனின் குலமான யாதவ குலத்தின் விருஷ்ணி பிரிவை சாா்ந்த வீரனாவான். சாத்தியகி சினி என்பவரின் பேரனும் சாத்யாகரின் மகனும் ஆவார். கிருஷ்ணன் சாத்யகிக்கு மாமன் முறையாகும். கிருஷ்ணரும், பலராமனும் விருஷ்ணி பிரிவை சேர்ந்தவர்களே. கிருஷ்ணனின் உற்ற நண்பரும் ஆவார். சாத்யகி, கண்ணனிடமும், அருச்சுனனிடமும் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான்.

யாதவ குலத்தில் மொத்தம் ஏழு பிரிவுகள் உள்ளன. அதில் ஹைஹேயர்கள் யாதவ குலத்தில் உயர் பிரிவை சேர்ந்தவர்களாகவும் மற்ற யாதவ குல பிரிவுகளான சேதர்கள், விதர்ப்பர்கள், அந்தகர்கள், குகுரர்கள், போஜர்கள் மற்றும் விருஷ்ணிகள்.



சாத்யகியும் அருச்சுனனும் துரோணரிடம் ஒன்றாகப் கல்வி பயின்றவர்கள். பாண்டவர் களுக்கும், கௌரவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கில், சாத்யகி பாண்டவர்களை ஆதரித்தான். கண்ணன் பாண்டவர்களுக்காகக் கௌரவர்களிடம் தூது சென்ற போது சாத்தியாகியும் உடன் சென்றிருந்தான்.

குருஷேத்திர போரில் கலந்துகொண்ட யாதவ குல வீரர்களுள் சாத்யகியும், கிருதவர்மனும் முக்கியமானவர்கள். எனினும், இருவரும் எதிர்த் தரப்புகளில் சேர்ந்து போரிட்டனர். சாத்யகி பாண்டவர்களுடன் சேர்ந்து போரிட, கிருதவர்மன் கௌரவர்கள் பக்கம் நின்றான். மேலும் குருஷேத்திர போரின் போது கௌரவ சேனையின் அனைத்து வீரர்களையும் தோற்க்கடித்த வீரன் எனும் முத்திரையை ஆழமாக பதித்தவன்.

சாத்யகி துரோணரிடமும் அர்ஜுனனிடமும் வில் வித்தையை கற்றவர். இருப்பினும் அர்ஜுனனையே தன் மானசீக குரு என பல இடங்களில் முன்னிருத்தி கூறியிருப்பான் (குறிப்பாக சுபத்திரை திருமணத்தின் போது)

குருஷேத்திர போரில் துரோணரின் வில் நாணை நூற்றியோரு முறை தொடர்ந்து அறுத்து வெல்லமுடியாத சாத்யகி என்று துரோணரால் புகழப்பட்டவர். பாண்டவர் தரப்பில் இருந்த மிக சிறந்த வில்லாளிகளில் இவரும் ஒருவர்.

சாத்யகியின் தாத்தாவான சினி, வசுதேவருக்காக (கண்ணனின் தந்தை) சுயம்வரத்தில்பங்கேற்று தேவகியை வெல்கிறார். இதை ஏற்காத சோமதத்தர் என்ற மன்னர் சினியை எதிர்க்க சோமதத்தரை தேர்க்காலில்கட்டி அவமதிக்கிறார் சினி. இதற்கு பழிவாங்க சோமதத்தர் தன் மகன் பூரிஸ்சிரவஸ் மூலம் சினியின் மகனான சாத்யாகரை அதே முறையில் அவமதிக்கிறார். இதற்கு பழிமுடிக்க தக்க நேரம் பார்த்து காத்திருக்கிறார் சாத்யகி இப்படி இரு குடும்பத்திற்கிடையே குலபகை நெடுங்காலமாய் நிலவுகிறது. பூரிசிரவஸ் பாஹ்லிக நாட்டு மன்னராவர். சாந்தனுவின்சகோதரன் பாஹ்லிகனின் பேரனும், சோமதத்தனின் மகனும் ஆவன். இவனுக்கு கிருஷ்ணன் மற்றும் சாத்யகியும் பிறவிப் பகை வர்கள் ஆவர்.

குருஷேத்திர கௌரவர் அணியில் சேர்ந்து, பாண்டவர் அணிக்கு எதிராக போரிட்டவன். 5ஆம் போரில் சாத்யகியின் பத்து மகன்களை பூரிசிரவஸ் கொன்றான். 14–ஆம் போரில் அபிமன்யுவின் மரணத்திற்கு காரணமான ஜெயத்திரதனை பழி வாங்க வந்த அருச்சுனனை சக்கர வியுகத்தை உடைக்க இயலாதபடி தடுத்து நிறுத்தினான். பின்னர் சாத்தியகியை கொல்ல வந்த பூரிசிரவசின் ஒரு கையை அருச்சுனன் வெட்டி எறிந்தான். உடன் சாத்யகி பூரிசிரவசின் தலையை தன் வாளால் கொய்தான்.

இறுதியாக நடந்த பாரத யுத்தத்தில் சோமதத்தரையும் பூரிஸ்வரசையும் தன் கைகளாலேயே கொன்று குலப்பகையை தீர்த்து கொள்கிறார் சாத்யகி. மேலும் இது மட்டுமல்லாது கௌரவ தரப்பில் இருந்த பீஷ்மரை தவிர அனைத்து மாவீரர்களையும் வென்று தன் வீரத்தை பாரத போரில் பறைசாற்றிய மாவீரன் சாத்யகி ஆவார்.

பாண்டவர்களின் வனவாசத்தின் போது துவாரகையில் வாழ்ந்த அபிமன்யுவிற்கு போர் பயிற்சி அளித்தவர்களில் சாத்யகியும் ஒருவர். ஒரு அக்குரோணி சேனையுடன் குருஷேத்திர போரில் பாண்டவர்களுக்கு ஆதரவாக போரிட்டார். அக்குரோணி அல்லது என்பது, பழங்காலத்து போர் அணிவகுப்பு வகைகளுள் ஒன்று. இது 21870 தேர்களையும் 21870 யானைகளையும் 65610 குதிரைகளையும் 109350 படை வீரர்களையும் உள்ளடக்கியது. பாண்டவ அணியின் எழு படைத்தளபதி களுள் சாத்யகியும் ஒருவர்.

14ம் நாள் போர் பாண்டவர்களுக்கு சாதகமாக முடிகிறது, இதனால் இரவில் தாக்குதல் செய்கிறது கௌரவ படை, தன் மகன் பூரஸ்சிரவஸ் மரணத்திற்கு பழிதீர்க்க சாத்தியகியை தாக்குகிறார் சோமதத்தர், சோமதத்தரை கொன்று தன் குல பகையை தீர்த்துக்கொள்கிறார் சாத்யகி, 18 நாள் போர் முடிவில் உயிருடன் எஞ்சி வீரர்களில் சாத்யகியும் ஒருவர். சாத்யகி பாணாசுர யுத்தத்தில் கிருஷ்ணரின் சார்பாக சிவ பெருமானின் சேனையுடன் அபார கீர்த்தியுடன் போராடினான்.

பாரதப் போர் முடிந்து 36 ஆண்டுகள் கழித்து அனைத்து யாதவர்களும் பிரபாச கடற்கரைக்கு செல்கின்றனர் (இன்றைய சோம்நாத் கோயிலுக்கு அருகிலுள்ள வெராவல் என்னும் இடமே இது).

அங்கு ஏற்பட்ட சிறிய மோதலில், பாண்டவர்களுக்காக போரிட்ட சாத்யகி போன்றோருக்கும், கௌரவர்களுக்காக (யாதவ சேனையுடன் போரிட்ட) கிருதவர்மன் முதலானோருக்கும் இடையே வாக்கு வாதம் தொடங்குகிறது.

இந்த வாக்குவாதம் முற்றி முடிவில் அந்த கடற்கரையில் வளர்ந்திருந்த கோரைப் புற்களை கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கி அனைவரும் உயிரிழக்கின்றனர். பலராமன் ஒரு வெள்ளைப் பாம்பின் வடிவில் கடலினுள் புகுந்து வைகுண்டம் அடைகிறார். கிருஷ்ணன் ஒரு வேடனின் அம்பு கால் துளைக்கப்பட்டு, அதை ஒரு காரணமாக கொண்டு, வைகுண்டம் ஏகுகிறார். பின்னர், துவாரகை கடலால் மூழ்கடிக்கப்படுகிறது. யாதவ வம்சம் இத்துடன் முடிவடைந்ததாக ஸ்ரீமத் பாகவத புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

# திருப்பதி லட்டு உருவான வரலாறு

ஏழுமலையானுக்கு நிவேதனம் செய்யப்படும் பிரசாதங்கள் வடை, பொங்கல், சர்க்கரைப் பொங்கல்... இப்படி எத்தனையோ உண்டு. அவை அனைத்தையும் தாண்டி அன்றும், இன்றும், என்றும் முதல் இடத்தில் நிற்பதென்னவோ லட்டு மட்டும்தான்.

சரித்திரக் காலம் முதல் பெருமாளுக்கு பல வகையான நைவேத்தியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் தேவராயர் காலத்தில் நைவேத்தியங்கள் எண்ணிக்கை பலவாகப் பெருகியது. அந்தக் காலகட்டத்தில் அரசவையில் பணிபுரிந்த சேகர மல்லாண்ணன் எனும் அமைச்சர், பெருமாளின் நைவேத்தியத்துக்காகப் பல தானங்களை வழங்கினாராம்.

அப்போதுதான் `ஸ்ரீவாரி நைவேத்திய சமயம்' எனும் முறை ஏற்படுத்தப்பட்டது.

அந்தக் காலத்தில் திருமலையில் உணவகங்கள் அவ்வளவாக இல்லை. பிரசாதங்கள்தான் பக்தர்களின் பசியைப் போக்கும் அருமருந்தாக இருந்தன. மேலும், பக்தர்களுக்கு அளிக்கப்படும் பிரசாதம் 'திருப் பொங்கல்' என்று அழைக்கப்பட்டது. பின்னரே அதிரசம், அப்பம், வடை, சுய்யம், மனோகரப்பொடி பிரசாதங்கள் தயார் செய்யப்பட்டன.

இவற்றில் வடை தவிர வேறு எதுவும் வெகு நாள்கள் தாங்காது. மற்ற பிரசாதங்கள் கெட்டுப் போய்விடும் நிலையில் அவற்றை பக்தர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்ல இயலாமல் போனது. இதனால் அதிக நாள்கள் கெடாமலிருக்கும் வடைக்குத்தான் அப்போது மவுசு இருந்தது.



இதைக் கவனத்தில் கொண்ட மதராச அரசாங்கம் 1803ம் ஆண்டிலிருந்து பிரசாதங்களை விற்பனை செய்யத் தொடங்கியது. அன்றிலிருந்து ஸ்ரீவாரி ஆலயத்தில் பிரசாத விற்பனைக் கூடம் ஏற்படுத்தப்பட்டது. அப்போது லட்டு பிடிப்பதற்கு முன்னர் உதிரியாக இருக்கும் பூந்தி, இனிப்புப் பிரசாதமாக வழங்கப்பட்டது. அந்த பூந்திதான் லட்டாக உருப்பெற்றது.

``லட்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்களை `திட்டம்' என்று அழைப்பார்கள். லட்டை அன்றாடப் பிரசாதமாக்கிய பெருமை அப்போது ஆலயப் பிரசாதங்களைத் தயாரித்து அளித்த கல்யாணம் ஐயங்கார் என்பவரையே சாரும்.



இவர் காஞ்சிபுரம் அருகேயுள்ள பூதேரி என்ற கிராமத்திலிருந்து தமது உறவினர்களுடன் திருப்பதியில் தங்கி திருமலை ஏழுமலையானுக்கு கைங்கர்யம் செய்ய தம்மையும் தம் குடும்பத்தையும் ஈடுபடுத்திக்கொண்டவர். நாள்தோறும் திருமலைக்கு நடந்து படியேறிச் சென்று பெருமாளுக்கு அன்றாடப் பிரசாதங்களைத் தயாரித்து அளிக்கும் திருப்பணியை செய்துவந்தார்.

ஒருநாள் பெரும் செல்வம் படைத்த வியாபாரி ஒருவர், தனது கோரிக்கையை நிறைவேற்றினால், மலை போன்ற பிரமாண்டமான லட்டைத் தயாரித்து பெருமாளின் திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு அளிப்பதாக வேண்டிக்கொண்டாராம். பெருமாளும் அவருடைய வேண்டுதலை நிறைவேற்றினார். அப்போது உருவானதுதான் லட்டுப் பிரசாதம்.



பக்தரின் லட்டு வேண்டுகோளைக் கேட்ட கல்யாண ஐயங்கார், அப்போது இருந்த திருமலை தேவஸ்தான அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, மிகப் பிரமாண்ட லட்டைத் தயாரித்து, அதை உடைத்து வழங்குவதைவிட சிறிய லட்டாக அன்றைய தினம் கல்யாண உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு அளிக்கலாமே என்று யோசனை தெரிவித்தார்.

இதை ஒப்புக்கொண்ட தேவஸ்தானம், அதன் படியே அன்றைய தினம் கல்யாண உற்சவத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் லட்டு பிரசாதத்தை அளித்தது. அன்றிலிருந்து சில காலம் கல்யாண உற்சவத்தில் மட்டும் லட்டு அளிக்கும் முறை உருவானது. பின்னர் அதுவே இன்றளவில் அனைத்து சேவைகளுடன் லட்டு அளிக்கும் முறையாக மாறியது.

இந்தப் பிரசாதங்கள் ஆலயத்தின் உள்புறத்தில் கொலுவிருக்கும் பெருமாளின் அன்னையான வகுளாதேவியின் நேரடிப் பார்வையில் மடப் பள்ளி அறையில் தயாரிக்கப்பட்டது. அங்கு மகனுக்கு தயாரிக்கப்படும் பிரசாதங்களை தாய் வகுளாதேவி மேற்பார்வையிட்டு அனுப்புவதாக ஐதீகம். உண்மைதான்! மகனின் பசி அன்னைக் குத்தானே தெரியும்? நாளடைவில் லட்டு விற்பனை அதிகரித்ததையொட்டி, ஆலயத்தின் உள்ளே மட்டுமல்லாமல் வெளிப் பகுதியிலும் லட்டு தயாரிக்கும் அறைகள் ஏற்படுத்தப்பட்டன.

லட்டு தயாரிக்க 51 பொருள்கள் பயன் படுத்தப்படுகின்றன. ஆலய உக்கிராண (பொரு ள்கள் சேமிக்கும் அறை) அறையிலிருந்துஇந்த பொருள்கள்லட்டுதயாரிக்க அளிக்கப்படுகின்றன.

### 5,100 லட்டுகள் தயாரிக்க;

185 கிலோ பசு நெய்,
200 கிலோ கடலை மாவு,
400 கிலோ சர்க்கரை,
35 கிலோ முந்திரிப் பருப்பு,
17.5 கிலோ உலர்ந்த திராட்சை,
10 கிலோ கற்கண்டு,
5 கிலோ ஏலக்காய் ஆகியவை பயன்படுத்தப் படுகின்றன.

அதாவது,

5,100 லட்டுகள் தயாரிக்க 852.5 கிலோ பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திருப்பதியில் மூன்றுவிதமான லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

1. ஆஸ்தான லட்டு'
2. கல்யாண உத்சவ லட்டு'
3. ப்ரோக்த லட்டு'

என மூன்று வகைப்படும். இது விசேஷ உற்சவ நாள்களில் மட்டுமே தயாரிக்கப்படும்.

### ஆஸ்தான லட்டு:

இது முக்கிய பிரமுகர்களுக்கு மட்டும் அளிக் கப்படும். இதன் எடை 750 கிராம். இந்த லட்டில் குங்குமப்பூ சேர்க்கப்படுவதோடு திட்டத்துக்கு அதிகமான அளவு பருப்பு வகைகள் மற்றும் நெய் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்படும்.

### கல்யாண உத்சவ

இன்றைய விலை 100 ரூபாய்.

### புரோக்த லட்டு:

இதன் எடை 175 கிராம். இந்த லட்டு முதலில் 8 அணாவில் விற்கப்பட்டது. பின்பு 2 ரூபாய், 4 ரூபாய் என்று படிப்படியாக ஏறி இன்று இதன் விலை ரூ.50.

முதலில் மிராசுதாரர்கள் லட்டு மட்டுமல்லாமல் மற்ற பிரசாதங்களையும் தயார் செய்தனர். அப்போதைய தேவஸ்தான நிர்வாக அதிகாரி அன்னாராவ், லட்டு தயாரிக்கும் மிராசுதாரர் களுக்கு லட்டையே வருமானமாக அளிக்க உத்தரவிட்டார்.

அதன்படி 51 லட்டு தயாரித்தால் 6 லட்டு அவர்களுக்குச் சொந்தம். 6 லட்டுகளை அவர்கள் விற்றுக்கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இப்படித் தொடங்கிய லட்டு தயாரிக்கும் முறையில் ஒரு நாளைக்கு 1,000 லட்டுகள் தயாரித்த மிராசுதாரர்கள், ஒரு நாளைக்கு லட்சம் லட்டு தயாரிக்கும் நிலைக்கு உயர்ந்தார்கள்.

இந்தச் சட்டம் 1996–ஆம் ஆண்டில் மாற்றப் பட்டது. மிராசு உரிமையை நீக்கிவிட்டு தேவஸ்தானமே லட்டு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது. தற்சமயம் தேவஸ்தானம் தற்காலிகப் பணியாளர்களை நியமித்து, அவர்களைக் கொண்டு லட்டு மற்றும் பிற பிரசாதங்களைத் தயாரித்து வருகின்றது.

ஆயினும் அந்த நாளைய ருசி இன்றிருக்கும் லட்டுகளில் இருப்பதில்லை என்பதே பக்தர்களின் கருத்து.

லட்சக்கணக்கில் லட்டுகளைத் தயாரிக்க முன்புபோல விறகு அடுப்பு சாத்தியமாகாது. ஆகையால், பெரிய காஸ் அடுப்பில் லட்டு பூந்தி சலிக்கப்படுகின்றது. பின்னர், அந்த பூந்தியுடன் சர்க்கரைபாகைக் கலப்பதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போதிருக்கும் விலை ஏற்றத்தை அனுசரித்து முந்திரி, திராட்சை, பாதாம் பருப்புகள் சேர்க்கப்படுவது குறைவு என்பது போன்ற பல காரணங்கள் சொல்லப்படுகிறது.

திருப்பதி லட்டு விற்பனை ஒருநாளைக்கு சுமார் லட்சங்களைத் தொடுவது மட்டும் குறை வதில்லை.



# குழந்தைகளை எப்போது ஆன்மிகத்தில் ஈடுபடுத்தலாம்



ஒரு முறை பக்தர் ஒருவர் பெரியவா விடம், "சுவாமி! குழந்தைகளுக்கு பக்தியில் நாட்டம் வருவதில்லையே....

காலம் போகப் போகத்தான் பக்தியின் ருசி புரியத்தொடங்கும்..

வாழ்வில் வரும் அனுபவங்களைப் பொறுத்து, அவர்களின் மனம் கடவுளை நாடத் தொடங்கும்..

அதுவரை பொறுமையுடன் இருக்கத் தானே வேண்டும்?

வலுக்கட்டாயமாக பக்திப் பயிரைவிதைத்தால் பலன் கிடைக்குமா? என்று கேட்டார்..

சுவாமிகள் கனிவுடன், "உன் வீட்டில் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பதுண்டா?" என்று கேட்டார்.

பக்தர், "தினமும் தயிர்ப் பானையில் மத்தை வைத்து, கயிறு கட்டி இழுத்துக் கடைவார்களே..." என்றார்..

"எந்த வேளையில் கடைவார்கள்... காலை யிலா, மத்தியானமா?"

"அதிகாலையில் தான் சுவாமி"

"மத்தியானம், அல்லது சாயந் திரம் கடைவ தில்லையே ஏன்?"

பதில் தெரியாமல் திகைத்தார் பக்தர்..



"அதிகாலை சுபமான வேளை. அந் நேரத்தில் வெயில் ஏறாததால் சுற்றுப்புறம் உகுளிர்ச்சியாக இருக்கும்.. அப்போது கடைந்தால் வெண்ணெய் பந்தாக திரளும்..

உருகாமல் கெட்டியாகவும் இருக்கும். சூரியன் வானில் உக்கிரமாகி விட்டால் போச்சு..

வெண்ணெய் திரளாமல், கடையக் கடைய உருகி விடும்..." என்று கூறி நிறுத்திய பெரியவா

மேலும் தொடர்ந் தார், "அது போல, வயதான காலத்தில் மனதில் பல சிந் தனைகளும் அலை மோதும். அப்போது பக்தி என்னும் வெண்ணெய் திரள்வது கடினம். குழந்தை களின் மனம் குளிர்ச்சியானது..

அதில் காம, குரோத சிந்தனை இருக்காது.

அப்போது கடவுள் சிந்தனை என்னும் மத்தால் கடைய, பக்தி எனும் வெண்ணெய் சுலபமாகத் திரளும்.."

"இதனால், பெற்றோர் வாரம் ஒரு முறையாவது கோயிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.. இந்தப் பழக்கம் அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும்.

துன்பம் வந்தாலும் கடவுள் அருளால் அது நம்மைபாதிக்காதுஎன்ற சிந்தனை உருவாகும்..

அதனால் பக்திக்கு ஏற்ற வயது இளமைப் பருவம் தான்.. புரிகிறதா? " என்று கனிவாகக் கூறினார் பெரியவா..

பக்தரும் இதயம் கனிந்து பெரியவா பாதம் பணிந்து நமஸ்கரித் தார்.

# தியானத்தின் தெய்வீக உணர்வு நிலையில் உங்கள் மனதை நிலை நிறுத்துங்கள்



85 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

அன்பு குருதேவர் அருளுகிறார்: "சபலம், பேராசை, மக்களிடமும் உடைமைகளிடமும் உள்ள பற்று, புலன் அடிமைத்தனம், உங்கள் ஆன்மீக இயல்பைப் பற்றிய அறியாமை, சோம்பல், இயந்திர வாழ்க்கை ஆகிய அனைத்தும் உங்களுடைய மகிழ்ச்சியின் மிக மோசமான எதிரிகளாவர். தியானத்தினால் விருத்தி செய்யப்பட்ட தெய்வீக உணர்வில், உங்கள் மனதை நிலைப்படுத்தி மும்முரமாகப் பணியாற்றிக் கொண்டிருங்கள்; அப்பொழுது நீங்கள் உண்மையாகவே மகிழ்ச்சியாக இருப்பீர்கள்; உண்மையாகவே வாழ்வீர்கள். நான் தியானம் செய்ய ஆரம்பித்தபோது, அதில் இவ்வளவு ஆனந்தம் காண்பேன் என நான் ஒருபோதும் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. ஆனால், காலம் செல்லச்செல்ல, எவ்வளவு அதிகமாக நான் தியானித்தேனோ அவ்வளவு எனது ஆனந்தமும் அமைதியும் அதிகரித்தன.

மேலும் அவர் கூறுகிறார்: " நீங்கள் வாழும் வாழ்க்கையில் சலிப்படையும்போது கூட, நீங்கள் தொடர்ந்து அதை அதிக உடைமைகளுடனும், புதிய அனுபவங்களுக்கான அதிக ஆசைகளுடனும் நிரப்பிக்கொண்டே போனால், நீங்கள் தவறான பாதையில் உள்ளீர்கள். சபலத்தைத் தவிர்க்கும் மிக நிச்சயமான வழி, இறைவனோடு இணக்கமாக இருக்கும் ஓர் இயற்கையான வாழ்க்கையை நடத்துவதுதான். ஆனந்தத்தைத்தர சக்தியற்ற ஓர் உலகில் அதை ஓய்வின்றி தேடிக்கொண்டு ஒரு செயற்கையான வாழ்க்கையை நடத்தாதீர்கள். வாழ்க்கை மிகமிக அரிதானது. ஒவ்வொரு நாளும் நான் அவனிடம் பிரார்த்திக்கிறேன். "என்னிடமிருந்து எல்லாவற்றையும், அது உன் விருப்பமானால் எடுத்துக்கொண்டுவிடு. நான் என்னால் இயன்ற அளவு செய்ய முயன்றுகொண்டிருக்கிறேன். தந்தையே, இதை மட்டும் நிச்சயமாக தெரிந்துகொள்: "எல்லாவற்றிற்கும் மேலாக நான் உன்னை மட்டுமே மகிழ்விக்க விரும்புகிறேன். நான் மற்றவர்களையும் மகிழ்விக்க முயலுவேன். ஆனால் மற்ற எதனையும்விட உன்னை மகிழ்விக்க விரும்புகிறேன்." இவ்வாறு நீங்கள் பிரார்த்தித்தால், ஆசைகளின் பல சோதனைகளுக்கு நீங்கள் ஆளாவீர்கள். ஆனால் தீயப்பழக்கங்களையும் மனோபாவங்களையும் எதிர்த்து தொடர்ந்து போராடும்பொழுது, அவன் படிப்படியாக உங்களிடம் வரத்தொடங்குவான்; முடிவில் ஒரு பெருவெள்ளம் போன்று உங்களது அனைத்து விரும்பத்தகாத குணங்களையும் அவன் அடித்துச் சென்றுவிட்டதைக் காண்பீர்கள்."

கிருஷ்ணன் கூறியது: " ஐம்புல அனுபவங்களை தேகரீதியில் தவிர்ப்பவன், சிறிது காலத்திற்கு இவை அகல்வதையும், ஆனால் அவற்றிற்கான ஆசை நீடித்திருப்பதையும் காண்கிறான். ஆனால் மெய்ப்பொருளை காண்பவன், ஆசைகளிலிருந்தும் கூட விடுதலைபடுத்தப்படுகிறான். (பகவத்கீதை அத்.2 ஸ்லோகம்.59) எல்லா இருளையும் அவனுடைய ஒளியாலும், தீயஎண்ணங்களை, நல்ல எண்ணங்களாலும் அகற்றிவிடுங்கள். தியானத்தில் இறைவனின் உன்னத ஈர்ப்பைக் கண்டறிவதன் மூலம், சபலத்தை நீக்குங்கள். அதுதான் சபலத்திற்கு எதிரான மிகச்சிறந்த ஆயுதம். எந்த நேரத்திலாவது உங்கள் மனஉறுதி அடக்கப்படுகிறது என நீங்கள் உணர்ந்தால், இறைவனது இருப்பை நீங்கள் உணரும்வரை தியானம் செய்யுங்கள்."

இறைவனுக்கு முதலிடம் கொடுப்பதுபற்றி எழுத விரும்புகிறேன். தியானத்திற்கு முதலிடம் கொடுப்பதே அல்லது தியானத்திற்காக (இறைவனுக்காக) நேரத்தை ஒதுக்குவது, என்பதே இறைவனுக்கு முதலிடம் கொடுப்பதாகும். அவ்வாறு செய்தால் நன்மை ஏற்படும்.

இறைவனுக்கு முதலிடம் கொடுத்தால் நடப்பவை.

இறைவனுக்கு எல்லாரும் எப்பொழுதும் முதலிடம் கொடுக்கத்தான் வேண்டும். அது மிகமுக்கியம் முன்னருள்ள கட்டுரையில் கூறியுள்ளவாறு ஓர் ஆத்மா முன்னேறிவரும்பொழுது அவனுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும்தான் முக்கியமாகப் பார்க்கவேண்டும். அவனுடைய குடும்பத்தில் அவன் செய்யவேண்டிய கடமைகள் ஏராளமாக இருக்கும்பொழுதுகூட அவனுடைய சிந்தனைகள் இறைவன்மேல்தான் சென்றுகொண்டிருக்கும். உடலானது பணிகளைச் செய்கின்றது; அதேசமயம் மனமானது இறைவனில் வேரூன்றுகிறது. ஒருமனிதனால் ஒரே சமயத்தில் இரண்டினையும் செய்யமுடியுமா? நிச்சயம் முடியாது. அப்படிச்செய்தாலும் இறைவனில் மனம் வேரூன்றாது. மனம் இறைவனிடத்தில் ஒருநிலைப்படுகிறது என்றால் அது அவனுடைய அருள்தான் காரணம். ஒரு பக்தன் தவறாமல் பயிற்சி செய்கிறான். பயிற்சி செய்தால் மட்டும் போதாது. "நான் தவறாது பயிற்சி செய்கிறேன். எனக்குமட்டும் இறைவனை அடையமுடியவில்லையே" என்று எண்ண வேண்டாம். வெறும் பயிற்சியால் மட்டும் அல்ல; அந்த பக்தனுடைய மனம் எங்கிருக்கிறது? அது உலகப்பொருளிலா அல்லது இறைவனிடத்திலா? ஆசையும் பற்றும் எதன் மேலுள்ளது? பொருள் மேலுள்ளதா? அல்லது இறைவன் மேலுள்ளதா? தன் கடமைகளை பற்றற்ற ஆர்வத்துடன் செய்கிறானா? கடமைகளை சரிவரச் செய்கிறானா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சரியாக இருந்தால் அந்த பக்தன் தகுதியுடையவன் என்று இறைவன் தீர்மானிக்கிறான். அதன்பின்னர் அந்த பக்தனுக்கு என்ன தரவேண்டுமோ அதை இறைவன் தருவான். பயிற்சியால்தான் இறை அனுபூதி தமக்குக் கிடைத்தது என்று யாரும் நினைக்க வேண்டாம். இவையெல்லாம் அனைவருக்கும் ஒரு பிறவியில்

கண்டிப்பாகக் கிடைத்துவிடும்.

இறைஅனுபூதி வேண்டும் என்று நினைக்கின்றவர்கள், பிறரையும் பிற உயிர்களையும் தன்னைப்போன்று நினைக்கவேண்டும். எதிலும் அகங்காரம் கொள்ளாதிருக்கவேண்டும். சமநிலை யான மனம் இருக்கவேண்டும். இறைவனின் விதிமுறைகளை தெரிந்துகொண்டு அனைத்தையும் கடைபிடித்து வாழவேண்டும். மேலும் கருணையான மனம் வேண்டும். இறைவன் கருணையுடையவன்; களங்கமற்றவன். அதேபோன்ற மனம் மனிதனுக்கு இருக்கவேண்டும். ஆனால் பெரும்பாலானோர் கருணையை மறந்துவிட்டு இறைவனைத் தேடுகின்றனர். இறைவன் கிடைப்பானா? இந்த பக்குவப் பட்ட மனநிலை ஒருபிறவியில் எல்லா ஆத்மாக்களுக்கும் இறைவன் அருள்வான். ஆனால் அது எந்தப்பிறவியில் என்பதை இறைவன் மட்டும்தான் அறிவான். இரும்பை நெருப்பிலிட்டுக் காய்ச்சிப்பழுக்கவைத்து அடித்தால்தானே அதை இஷ்டத்திற்கு வளைக்கமுடியும் என்பதை குருதேவர் நமக்கெல்லாம் போதித்துள்ளார்.

அதுபோன்று துன்பங்களாகின்ற நெருப்பிலிட்டுக் காய்ச்சி அடித்தால்தான் அகங்காரமெல்லாம் அடியோடு மறைந்து பின்னர் பணிவு வரும். பணிவு வந்தால்தான் உண்மையான (இறைவனுடன் இணைந்த) குருவிற்கு சீடனாக முடியும். ஓர் உண்மையான சீடனால்தான் குருவிற்கு கீழ்படிந்து வாழமுடியும். குருவிற்குக் கீழ்படிந்தால்தான் குரு இறைவனிடத்திலிருந்து பெற்ற செய்தியை (ஞானத்தை) தம் சீடனுக்கு அளித்தருள இயலும். மாறாக நடக்கும் சீடனின் ஆத்மாவை இறைவனிடம் சேர்ப்பதற்கு குருவிற்கு சிரமம் ஏற்படும். எந்த வகையிலும் குருவிற்கு சீடன் சிரமத்தை தரக்கூடாது. குருவிற்குக் கீழ்படிந்து வாழவேண்டும் என்பதைத் தெரியாத சீடர்களை குரு திருத்தி நல்வழிப்படுத்துவார். தெரிந்தே அகங்காரத்தில் தன்னிச்சையாக பிறர் மனதை நோகடித்து வாழுகின்ற சீடர்களை அந்த இடத்திலிருந்து (குரு இருக்குமிடம் ஆசிரமமென்றால் சீடனும் அதே ஆசிரமத்தில்தானே இருப்பான் அவன் அந்த ஆசிரமத்திலிருந்து) வெளியேற்றப்படுவான். அதன்பின்னர் அந்தசீடன் பாடம் கற்றுக்கொள்வான். குருவும் இறைவனும் ஒன்று என்பதால் அந்தசீடன் இறைவனிடத்திலிருந்து சிறிதுகாலத்திற்கு வெளியேற்றப்படுகிறான். அதை இறைவன் செய்வதன்று. அவனுடைய கர்மா அவனை குருவினிடத்திலிருந்து விலகச் செய்கிறது. குரு இறைவனுடன் இணைந்தவராகையால் குருவும் இறைவனும் ஒன்று என்று முன்னர் கூறியுள்ளேன். இவ்வாறான குருதான் உண்மையான குரு. உண்மையான குரு கிடைப்பது மிகவும் அரிது. அவ்வாறான குரு யாருக்குக் கிடைத்தாலும் அவர்கள் அந்த குருவிற்குக் கீழ்படிந்துதான் ஆகவேண்டும். கீழ்படியாமலிருப்பது மகாபாவம். இவ்வாறு' குருவிற்கு சீடன் கீழ்படியாமலிருப்பது' என்ற பாவச்செயலால் அல்லது கர்மாவால் அந்த மனிதன் சிறிது காலத்திற்கு அகற்றப்படுகிறான். நம் எல்லா துன்பங்களுக்கும் காரணம். நம் செயல்களே! சிறிதுகாலம் என்றால் ஒருபிறவியும் ஆகலாம், அதற்கு மேலும் ஆகலாம். அந்தச்சீடன் எப்பொழுது தன் தவறை உணருகிறானோ அப்பொழுது மன்னிக்கப்படுகிறான்.



பிரபஞ்சத்தந்தையாகின்ற, எங்கும் நிறைந்த இறைவனின் ஞானம் வழிகாட்டப்படவேண்டுமென்றால் நிச்சயமாக குருவிற்குக் கீழ்படிந்துதான் ஆகவேண்டும். இந்த உலகில் தனித்துவாழ்வது மிகவும் கடினம். இறைசிந்தனை இல்லாமல் வாழ்வதே

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்



தனித்து வாழ்வதன் பொருளாகும்; அல்லது தனித்து வாழ்வதற்குச் சமம் என்றும் கூறலாம். இறை நினைவுடன் வாழ்ந்தால் இறைவன் எப்பொழுதும் நம்முடன்தான் இருப்பான். அதுபோன்று வாழ்வதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதை இந்த பூமியிலிருந்து தான் கற்றுக்கொள்ள முடியும். பூமி என்பது ஒரு பாடசாலை. இறைவன் நம்முடன் இருப்பதுதான் நமக்கு முழுபாதுகாப்பு. அது கிடைக்கவேண்டுமென்றால் 'ஞானம்' மிகவும் அவசியம். ஞானம் பெற்றால் எந்த பயமும் இல்லை. நாம் இவ்வுலகில் எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம். பிறவியின்றி வாழவேண்டுமென்றால் நிர்குண பரப்பிரம்ம உபாசானை ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியம். நிர்குண பரப்பிரம்ம உபாசனையை தியானத்தால் மட்டும்தான் செய்ய இயலும். இறைவனின் நேரடித்தொடர்பு நாம் எங்கிருந்தாலும் அங்கே இருந்துகொண்டு செய்வது கொள்வது தியானத்தால் மட்டும்தான் இயலும். அதிலிருந்து பேரானந்தம், பேரின்பம், ஞானம் எல்லாவற்றையும் கிடைக்கபெறலாம். இவ்வாறு கிடைக்கப்பெறும் ஞானத்தால், ஆத்மா. உடலுடன் இருந்தாலும் சரி, உடலைவிட்டுப் போனாலும் சரி, மிகுந்த பாதுகாப்பு உண்டு. இவ்வாறு கிடைக்கும் பாதுகாப்பு வேறு எங்கேயும் கிடைக் காது. இறைவிதிகளை மதித்து இறை வனை குறிக்கோளாகக்கொண்டு வாழுகின்ற ஆத்மாக்களுக்கு இறைவ னின் சாம்ராஜியத்தில் அல்லது இறைவனிடத்தில் அவனே இடம் ஒதுக்கீடு செய்வான் அல்லாதோரை (இறைவிதிமுறைகளை மிதித்து வாழுபவர்களை) இறைவனிடத்திலிருந்து அவனுடைய கர்மா அவனை வெளியேற்றுகிறது. இறைவிதிமுறைகளை மதிக்கவில்லையென்றால் பூமியில் கையூட்டு கொடுத்து காரியம் சாதிப்பது போன்று இறைவனிடத்தில் எதுவும் பலிக்காது. இறைவிதிமுறைகளை மதிக்காதோர் அவர்கள் செய்த வினைகளை உணரும்வரை விளைவை அனுபவித்தேயாகவேண்டும். எனவே மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவரும் அன்பிற்குரிய குருதேவர் கூறுவது போன்று இவ்வுலகிலும் சரி, எவ்வுலகிலும் சரி, எந்தயுகத்திலும் சரி, தியானத்தால் இறைவனுடன் வாழ்ந்தால் மிகவும் சிறந்த பாதுகாப்பு உண்டு. அதைப்பெற நாம் முயல வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# கடவுளாகவும் இருந்தாலும் விதிக்குரிய பலனை அனுபவித்தே தீரவேண்டும்

கடவுளாக இருந்தாலும் தான் செய்த தவறுக்கு விதிப்படி அதற்குரிய பலனை அனுபவித்தே ஆக வேண்டும் என்பதை விளக்கும் பல சம்பவங்கள் உள்ளன.

குறிப்பாக ராமாயணத்தில் இது போன்ற விதி சம்பந்தப்பட்ட பல்வேறு கருத்துக்கள் குவிந்துள்ளது. அதில் ஒன்றைப் பற்றி பார்ப்போம்.



நிறை கர்ப்பிணியான சீதையைக் காட்டில் விட்டு வரும்படி ஸ்ரீராமர் லக்ஷ்மணனிடம் சொல்ல, அவனும் விட்டு விட்டுத் திரும்புகிறான். அப்போது அவன் தன் அண்ணனின் நிலை பற்றிப் புலம்ப சுமந்திரர் அவனுக்கு எடுத்து உரைக்கிறார்.

"லக்ஷ்மணா, வருந்தாதே, கேள்! தன் பிள்ளை களான ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்கனர்களின் பிற்காலம் எப்படி இருக்கும் என்று ஜோதிட வல்லுனர்களிடம் தசரதர் கேட்டார்.

அவர்கள் ஸ்ரீராமர் தன் மனைவி, சகோதரர் களைப் பிரிந்து வாழ்வார் என்றும், தனக்கென வாழாமல் பிறருக்கென வாழ்வார் என்றும், அவருக்குப் பிறக்கும் பிள்ளைகளால் ரகுவம்சம் தழைக்கும்" என்றும் கூறி இருக்கிறார்கள்.

இதனால் வருத்தமடைந்த தசரதன், வசிஷ்டரைப் பார்க்க ஆசிரமத்திற்குப் போன போது அங்கே தற்செயலாக வந்திருந்த துர்வாச முனிவர், தசரதரின் பிள்ளைகளான ராமர், லக்ஷ்மணர், பரதர், சத்ருக்கனர் ஆகியோர் பற்றி மன்னனிடம் கூறியது என்ன என்றால்:

"தசரத மன்னனே! எதுவும் நம் கையில் இல்லை. இது இப்படித்தான் நடக்க வேண்டும் என்பது விதி! அதை யாராலும் மாற்ற முடியாது. இது மஹாவிஷ்ணு பெற்ற சாபத்தின் பலன்" என்றார்.

"அது என்ன" என்று தசரதர் கேட்டார்.

"மன்னா, முன்னொரு காலத்தில் அசுரர்கள் தங்களைக் காப்பாற்ற யாரும் இல்லாமல் பிருகு முனிவரின் ஆசிரமத்தில் தஞ்சம் அடைந்தார்கள். பிருகு முனிவரின் மனைவி கருணை மிகுந்தவள். அவளால் அசுரர்கள் பாதுகாக்கப் பட அசுரர்கள் அங்கே பயமில்லாமல் வாழத் தொடங்கினார்கள். அசுரர்களின் இந்தச் செயல் பற்றிக் கோபம் உற்ற தேவர்கள் மஹாவிஷ்ணுவிடம் முறையிடவே அவர் தகுதி இல்லாத அசுரர்களைக் காத்து ரக்ஷித்த பிருகு முனிவரின் மனைவியைத் தன் சக்கராயுதத்தால் அறுத்துத் தள்ளினார்.

மஹாவிஷ்ணுவின் இந்தச் செயலால் மனைவியை இழந்த முனிவர் மஹாவிஷ்ணுவைப் பார்த்துக் "கோபத்தினால் மதி இழந்த நீங்கள் எந்த நியாயமும் இல்லாமல் என் மனைவி யைக் கொன்றீர்கள். பாவங்களை எல்லாம் விலக்கும் வல்லமை படைத்த நீங்களே இப்படிச் செய்யலாமா? உங்களை நான் சபிக் கிறேன். நீங்கள் பூவுலகில் மனிதனாகப் பிறந்து, மனைவியை இழந்து நெடுங்காலம் மனவேதனையுடன் வாழவேண்டும்." என்று சபித்தார்.

பிறகு தன் சாபத்தாலும், மன வேதனையில் தானும் கோபமுற்றதாலும் முனிவருக்கு மிகுந்த மன வேதனை ஏற்பட்டது. அவர் வேதனையைக் கண்ட மஹாவிஷ்ணு அவரைத் தேற்றி பூவுலக நன்மைக்காகத் தான் அவருடைய சாபத்தை ஏற்பதாகக் கூறினார்."

அதன்படி ஸ்ரீராமர் அவதாரம் எடுத்து அயோத்தி மாமன்னனாக ஆட்சி புரிந்து, மக்க ளுக்காகவே வாழ்ந்து, அவர்களுக்காகவே மனைவியைத் துறந்து பின் தன் கையாலேயே தன் அருமைத்தம்பியான லக்ஷ்மணனையும் துறந்து மனவேதனை உற்றுப் பின் அவதாரப் பூர்த்தி செய்வார்." இது தான் தசரத மஹாராஜாவிடம் துர்வாசர் வசிஷ்டர் ஆசிரமத்தில் கூறியது.

ஆனால் இது தேவ ரஹஸ்யம் என்பதால் ஒருவருக்கும் கூறக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். நான் அந்தச் சமயம் அங்கே இருந்தேன். இத்தனை நாள் இது பற்றிப் பேசாமல் இருந்ததுக்குக் காரணம் இது இப்படித் தான் இருக்கும் என்று உனக்குத் தெரிவிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. ஆகையால் வருந்திப் பயன் இல்லை. மனதைத் தேற்றிக் கொள். கடவுளே ஆனாலும் பாவம் செய்பவன் தண்டிக்கப்படுவான். அவன் விதி அது. மனிதகுலம் இதைப் புரிந்து கொள்வதற்குத் தான் ராமாவதாரம் ஏற்பட்டது" என்றார்.




ஆன்மிகமலர் மெயில் புக்

# ஆகாச கருடன் கிழங்கு

## மருத்துவம்-திருஷ்டிக்கும் ஒரே தீர்வு

ஆகாச கருடன் கிழங்கு கொல்லங் கோவை பேய்ச்சீந்தில் என்றும் அழைக்கப்படும் கொடி வகையைச் சேர்ந்த ஒரு தாவர இனமாகும். இது எல்லா நிலத்திலும் வளரக்கூடியது. வறட்சியைத் தாங்கி வளரும். காடுகளிலும், மலைகளிலும் அதிகம் காணப்படும். தமிழகமெங்கும் காணப் படுகிறது. ஆகாச கருடன் கிழங்கு பூமிக்கடியில் இருந்து தோண்டி எடுத்த பின்னும் ஒரு கயிற்றில் தொங்க விட்டால் அது காற்றையும் வெளிச்சத்தையும் எடுத்துக் கொண்டு மண் நீர் தேவையில்லாமல் கொடியாக இலையுடன் வளர்ந்து வரக்கூடியது.

காடு, வேலியோரத்தில் உள்ள இதன் கொடி வாடி விட்டாலும் மழைகாலத்தில் தானே கொடி வளர ஆரம்பிக்கும். பின் அருகில் உள்ள மரம், புதர் வேலிகளில் பிடித்து மேல் நோக்கிச் செல்லும். இதன் இலை கோவை இலை போன்று இருக்கும். இதன் கொடி மென்பையாக இருக்கும். இதன் பூக்கள் சிறிதாக மஞ்சள் நிறத்தில் இருக்கும். பூத்த மறுநாள் உதிர்ந்து விடும். அந்த இடத்தில் சிறிய காய் உண்டாகும். அது பழுத்துச் சிவப்பாக இருக்கும் பின் காய்ந்து கீழே விழுந்து விடும். விதை மூலமும், கிழங்கு மூலமும் இன விருத்தியுண்டாகும்.

### மருத்துவப் பயன்கள்:

அக்காலத்தில் பாம்பு கடித்தவுடன் ஆகாச கருடன் கிழங்கில் எலுமிச்சம் பழம் அளவு நறுக்கி வெறும் வாயில் தின்னும் படி கொடுப்பார்கள்.

சில நிமிடங்களில் வாந்தியும், பேதியும் இருக்கும். விஷம் முறிந்து நோயாளி குணமடைவான். விஷம் முறிந்து உயிர் பிழைத்த பின் பாதிக்கப்பட்டவர் 24 மணி நேரம் வரை தூங்கவிடக்கூடாது. பசிக்கு அரிசியைக் குழைய வேக வைத்துக் கஞ்சியாகக் கொடுக்க வேண்டும்!

இதே தூளைக் கொடுத்து வந்தால் லிங்கப் புற்று, கொருக்குப்புண், நாட்பட்ட வெள்ளை ஒழுக்கு இவைகள் குணமாகும். மேக ரோக கிரந்திப் புண் யாவும் குணமாகும். மற்ற விஷப் பூச்சிகளின் விஷத்தையும் முறிக்கும். இந்த மருந்தைச் சாப்பிடும் பொழுது புளி, எண் ணெய், மிளகாய் ஆகாது. பத்தியம் காக்க வேண்டும்.





இந்தக் கிழங்கின் இலைகளைக் கொண்டு வந்து மை போல் அரைத்து கண்டமாலை, தொடைவாளை, இராஜ பிளவை, கழலை கட்டிகள் அரையாப்பு, இரத்தக் கட்டிகள், சிறு கட்டிகள் இவற்றின் மேல் கனமாகப் போட்டு வந்தால் கட்டி பழுத்து உடைந்து இரத்தம், சீழ் வெளியேறி ஆறி விடும்.

ஆகாச கருடன் கிழங்கு ஒரு எலுமிச்சம் பழ அளவு, அதே அளவு அதன் இலை, அதே அளவு கொடியின் தண்டு இவைகளைப் பொடியாக நறுக்கி ஒரு சட்டியில் போட்டு சீரகம் தேக்கரண்டியளவு, அதே அளவு மிளகு இவைகளை அம்மியில் வைத்து அரைத்து அத்துடன் சேர்த்து அடுப்பில் வைத்து, லேசாக வதக்கி ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு, நன்றாகக் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி, காலை மாலை அரை டம்ளர் வீதம் கொடுத்து விட வேண்டும்.

இந்த விதமாக 21 நாட்கள் கொடுத்து வந்தால் ஓயாத வயிற்று வலி, வாதப்பிடிப்பு, குலைநோய், பாண்டு ரோகம் இவைகள் யாவும் குணமாகும். ஆனால் காரம், புளி, நல்லெண்ணையை விலக்க வேண்டும்.

ஆகாச கருடன் கிழங்கு இலையைக் கொண்டு வந்து பொடியாக நறுக்கு வைத்துக் கொண்டு, ஒரு சட்டியை அடுப்பில் வைத்துத் தேக்கரண்டியளவு விளக்கெண்ணையை விட்டு, எண்ணெய் காய்ந்தவுடன், மூன்று கைப்பிடியளவு இலையைப் போட்டு, இலை பதமாக வதக்கியவுடன் அதை சுத்தமாக துணியில் சிறிய மூட்டை போலக் கட்டி, தாங்குமளவு சூட்டுடன் வேதனையுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்து வந்தால் கை, கால் மூட்டுகளில் ஏற்படும் வலி வீக்கங்கள் குணமாகும்.

ஆகாய கருடன் கிழங்கின் இலையைக் கொண்டு வந்து வெய்யிலில் சறுகு போல உலர்த்தி எடுத்து, உரலில் போட்டு இடித்து, மாச் சல்லடையில் சலித்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு, சொறி, சிரங்கு, ஆறாத புண், குழந்தைகளுக்குத் தோன்றும் அக்கி, கரப்பான் புண், சிரங்கு இவைகளுக்கு இந்தத் தூளுடன் தேங்காயெண்ணைய் சேர்த்து, குறிப்பிட்ட புண்களைக் கழுவி விட்டு மேலே தடவி வந்தால் மூன்றே நாட்களில் மறைந்து விடும்.

### திருஷ்டி போக்கும்

இந்த கிழங்கு திருஷ்டியை போக்கும் சக்தியும் உள்ளது. இந்த கிழங்கை வீட்டு வாசலில் கட்டி தொங்கவிட்டால், எந்தவித தீய சக்திகளும், திருஷ்டி, ஒருசில தோஷங்கள் அண்டாது.

நிலத்தில் பூமியின் அடியில் விளையும் கிழங்கு வகையான இம் மூலிகை கிழங்கிற்கு ஏன் ஆகாயத்தில் பறக்கும் கருடனின் பெயரை நம் முன்னோர்கள் சூட்டினார்கள்?

பொதுவாக பூமியில் ஊர்ந்து செல்லும் பாம்பு வகைகள் ஆகாயத்தில் கருடன் பறந்து செல்வதைப் பார்த்தால் ஓடி ஒளிந்து கொள்ளும். அதே போல் இக் கிழங்கின் வாசனை அறிந் தாலும் அந்த இடத்தை விட்டு உடனே அகன்று, ஓடி விடும்.

மேலும் எதிரிகளால் ஏவப்படும் பில்லி, சூன்யம், போன்ற மாந்திரீக எதிர் வினைகளை ஈர்த்து தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் தன்மை கொண்டது. இதனால் வீட்டில் உள்ள வர்கள் மாந்திரீக தீய விளைவுகளில் இருந்து காக்கப்படுவர்.

# கிழமைகளுக்குரிய கிரகங்களும் உணவுகளும்

எந்த உணவை எந்த கிழமைகளில் சாப்பிடுவது உகந்தது என்பதை அந்த கிரகங்களுக்குரிய தெய்வங்களுக்கு உகந்த பொருட்களுடன் இணைத்து உணவினை எடுத்துக் கொண்டால் உடல் நலம் சிறக்கும்.

கிரகங்களின் நிலைக்கு ஏற்ப உணவை மாற்றியமைப்பதன் மூலம் உடலுக்கு சத்தான உணவுகள் மூலம் கூடுதல் பலன்கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

அந்த வகையில் எந்த கிழமை என்ன கிரகம், அந்த கிரகத்திற்குரிய தானியங்களை வைத்து செய்யப்படும் உணவுகளைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

## ஞாயிறு - சூரியன்

- கோதுமை அல்வா, கோதுமை பாயாசம், கோதுமை சாதம், சப்பாத்தி, பூரி.
- கேசரி, கேரட் அல்வா.
- மாதுளை ஜூஸ், கேரட் சூப் , பரங்கிக்காய் சாம்பார்.

## திங்கள் - சந்திரன்

- பால், பால் கோவா, பால் பாயாசம், லஸ்ஸி, மோர்.
- பச்சரிசி சாதம், முள்ளங்கி, கோஸ் பொரியல், புட்டு, இடியாப்பம்.இட்லி.
- தேங்காய் சாதம், கல்கண்டு சாதம், தயிர் சாதம்.

## செவ்வாய் - செவ்வாய்

- துவரம் பருப்பு சாம்பார், துவரம் பருப்பு சட்னி, வடை,
- பீட்ரூட் அல்வா, பேரிச்சை பாயாசம், தர்பூசணி ஜூஸ்,
- தேன் கலந்த செவ்வாழை ,ஆப்பிள்,ஆரஞ்சு பழக்கலவை.மிளகாய் துவயல்.

## புதன் - புதன்

- கீரை தோசை, கீரை, வேப்பம்பூ ரசம்,
- பாவக்காய் தொக்கு, முருங்கைக் காய் சூப்,
- பாசிப்பயறு சுண்டல், புதினா, கொத்துமல்லி சட்னி,
- வாழைப் பழம், கொய்யாப் பழம் சேர்த்த பழக்கலவை.

## வியாழன் - குரு

- சுக்கு காபி,அல்லது கஷாயாம், கார்ன் சூப்,



- கடலைப் பருப்பு கூட்டு, கடலைப் பருப்பு வடை,
- தயிர் வடை, கொண்டைக்கடலை சுண்டல்,
- சாத்துக்குடி, மாம்பழஜூஸ்,
- பொங்கல், கதம்பதயிர், எலுமிச்சை சாதம்,
- மாதுளை, முந்திரி, திராட்சை, பேரிட்சை கலந்த தயிர் சாதம்.

## வெள்ளி - சுக்கிரன்

- பால் இனிப்புகள், பால் பாயாசம், காஷ்மீர் அல்வா,
- தேங்காய் பர்பி, வெண்ணையில் செய்த பிஸ்கட்,
- முலாம்பழ ஜூஸ், வெள்ளரி ஜூஸ், வாழத் தண்டு ஜூஸ்,
- இட்லி, தோசை, தேங்காய் சட்னி, கம்பு தோசை,
- ஆப்பம், அவியல், தயிர் சேமியா, புலாவ் ,
- கோஸ் சாம்பார், பூண்டு ரசம், வாழத்தண்டு பொரியல்,
- நீர் மோர், வெள்ளரி, பாசிப்பருப்பு சாலட்.

## சனி - சனி

- ஜிலேபி, எள் உருண்டை, அதிரசம்,
- சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை, கொள்ளு சுண்டல்,
- எள்ளு சாதம், எள் சட்னி, கொள்ளு ரசம்,
- மிளகு சாதம், மிளகு ரசம், உளுந்து சாதம்,
- புளியோதரை, எண்ணை கத்தரிக்காய் குழம்பு,
- நாவல் பழம், கருப்பு திராட்சை ஜூஸ்,
- பாதாம், முந்திரி, திராட்சை, பேரிச்சை, பிஸ்தா கலவை.

இதில் கூறப்பட்ட பெரும்பாலான பதார்த் தங்கள் செய்யப்படும் அடிப்படை பொருட்களைப் பார்த்தால், அவை எல்லமே அந்ததந்த கிரகங்களுக்கு உரியே தானியங்களே.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# கொரனாவின் ஆட்டம் எப்போது அடங்கும்



சமீபகாலங்களில் என்னை சந்திக்க வருபவர்கள் மூன்று கேள்விகளை என்னிடம் கேட்கிறார்கள் இந்த கொரனா வைரஸ் தொல்லை எப்போது தீரும் நாட்டிலுள்ள மிக கொடுமையான பொருளாதார பிரச்சனை எப்போது முடிவுக்கு வரும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் யுத்தம் வருமா? என்பது தான் அந்த மூன்று கேள்விகளாகும்

இதுவரையில் எந்த நோயுமே கொடுக்காத மரண பயத்தை கொரனா வைரஸ் உலக மக்கள் அனைவருக்குமே கொடுத்து வருகிறது இது மனிதர்களால் உருவாக்கப்பட்டதா? இயற்கையாக வந்ததா? என்ற கேள்விகள் ஒருபுறம் இருந்தாலும் ஒட்டுமொத்த மனித குலத்தையுமே இப்படி ஒரு தாக்கும் கொடுமை படுத்துவதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? குறிப்பாக இறை சக்தியின் மஹா கோபம் கிரகங்களின் மிக கொடுமையான பலாபலன்கள் இதற்கு காரணமா? என்பது தான் இந்த கேள்விகளின் அடிப்படை என்று நான் கருதுகிறேன்.

கிரகங்களை அடிப்படையாக கொண்டு வருங்காலத்தை கணித்து பார்க்கும் போது கிடைக்கிற பலன்கள் பொதுவாக சரியானதாகவே இருக்கும் ஆனால் அந்த பலன்கள் மனிதர்களுக்கு மட்டுமே மிகப்பொருத்தமானதாக பல நேரங்களில் அமையும் உலகத்தினுடைய வருங்கால நிகழ்வுகளை அறிந்து கொள்ள வேண்டுமானால் கிரகங்களை மட்டும் கணக்கிட்டால் போதுமானது அல்ல நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களில் நிலைபாட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படி கருத்தில் கொண்டு கணிக்கப்படும் கணக்குகள் சரியான முடிவுகளை தருமென்று விஸ்வாமித்ர மகரிஷி எழுதிய கௌசிக நாடி என்ற ஜோதிட நூலும் புலிப்பாணி சித்தர் எழுதிய நூலும் தெளிவாக சொல்லுகின்றன.




இதன் அடிப்படையில் ராகுகிரகமானது திருவாதிரை நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்த மே மாதத்தோடு விஷ கிருமிகளின் தாக்கம் மனிதர்கள் மத்தியில் குறைந்து போயிருக்க வேண்டும். ஆனால் அக்னி மற்றும் வாய்வு பூதங்களின் போக்கு விஷ கிருமிகளில் தாக்கத்தை குறைப்பதாக இல்லை இதை இன்னும் தெளிவாக சொல்லுவது என்றால் ஜூலை மாதம் இறுதி வரையில் அதிகரிப்பதற்கனா வாய்ப்பு இருக்கிறதே தவிர குறையும் சூழ்நிலை இல்லை ஜூலை மாதத்திற்கு மேல் காற்றின் போக்கு மாறுபடுவதால் நுண்ணுயிரின் தாக்கம் குறைய ஆரம்பிக்கும்




உலகத்தில் செய்யப்படுகிற எந்த பூட்டிற்கும் சாவி இல்லாமல் இருப்பது இல்லை எந்த இருட்டும் இருட்டாகவே தொடர்வது இல்லை அதே போல கொடுமையான இந்த வைரசுக்கும் முடிவு என்பது உண்மை படிப்படியாக குறைய ஆரம்பித்து டிசம்பர் மாதத்தில் முற்றிலுமாக உலகத்தை விட்டே இது சென்றுவிடும்.

அதற்குள் இதற்கு மருந்து கண்டுபிடிக்க முடியுமா? என்று ஒரு கேள்வி பிறக்கும் ஒரு உண்மையை சொல்வதாக இருந்தால் இந்த நோய்க்கு இப்போது கூட மனித குலத்திடம் மருந்து இருக்கிறது ஆனால் அது பயன்பாட்டிற்கு வராதவாறு சில அசுர சக்திகள் தடை செய்கின்றன நான் அசுர சக்திகள் என்று குறிப்பிடுவது கண்ணுக்கு தெரியாத அமானுஷ்ய சக்திகள் அல்ல கண்ணுக்கு தெரிகின்ற மனித சக்திகளே ஆகும். தங்களது சுய லாபத்திற்காக பல்லாயிரம் உயிர்கள் பலியானாலும் கூட அவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள் இது தான் உண்மை

இறைவன் என்பவன் கருணையானவன் என்றால் அசுரர்களில் கொடுமைகளை பார்த்து கொண்டிருக்கலாமா? என்று நமக்கு தோன்றும் காரணம் இல்லாத காரியங்கள் இல்லை இயற்கையில் ஒருபுறத்தில் அழிவு என்று ஒன்று நிகழ்ந்தால் மறுபுறத்தில் ஆக்கம் என்ற ஒன்று கண்டிப்பாக இருக்கும். இது இயற்கை விதி ஆனால் அதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டுமே தவிர அவசரபட்டால் அதற்கான விடை கிடைக்காது.

சரி இந்த வைரஸ் தொல்லையிலிருந்து ஓரளவாவது தப்பித்து கொள்ள வழி இருக்கிறதா? என்று தேடி பார்த்தால் அதர்வண வேதத்தில் ஒரு வழி சொல்ல பட்டியிருக்கிறது ஆனால் அது குறிப்பாக இந்த வைரசுக்கு என்று இல்லை எல்லாவிதமான தீய நுண்ணியிர்களை அழிப்பதற்கான வழிகளாகும்

சில கோவில்களில் மிளகாய் வற்றல் போட்டு சண்டி ஹோமம் செய்வார்களே அதே போன்று மிக சிறிதாக எளிமையாக நமது வீடுகளியே நாம்



செய்யலாம் ஆல், அரசு, மா, வேம்பு, ஆகிய மரங்களில் உள்ள குச்சிகளை வேப்பெண்ணை ஊற்றி தீ வளர்த்து அதில் மிளகாய் வற்றல்களை ஆகுதிகளாக போட வேண்டும் அப்படி போடும் போது

**ஓம் கிலீம் மஹா காளியே நம**

என்ற மந்திரத்தை நூற்றி எட்டு முறை உச்சரித்த வண்ணம் போட்டீர்கள் என்றால் உங்கள் வீட்டிலுள்ள தீய நுண்ணுயிர்கள் மடிந்து போகும். இதை வாரத்தில் வெள்ளிகிழமை தோறும் ராகுகால நேரத்தில் ஆண் பெண் யாராக இருந்தாலும் சுலபமாக வீட்டிலேயே செய்யலாம். இது நோய்கள் நம்மை அண்டாமல் தடுக்க நமது முன்னோர்கள் சொன்ன அருமையான வழியாகும்.

இரண்டாவது கேள்வி மக்களின் பொருளாதார கஷ்டம் அல்லது நெருக்கடி எப்போது முடிவுக்கு வரும் என்பதாகும். பொதுவாகவே நம்மில் பலர் வறுமைக்கு பழக்க பட்டவர்கள் எனவே துன்பத்தை கண்டு அஞ்சுகின்ற மனநிலை நமக்கு கிடையாது. எதிர்த்து போராடும் துணிச்சல் இறைவன் நமக்கு நிறையவே கொடுத்திருக்கிறான் இருந்தாலும் இந்த தற்கால நெருக்கடி இன்னும் ஒருமாதத்தில் மாற துவங்கிவிடும் யாருக்கும் கவலை வேண்டாம்.

மூன்றாவது மிக முக்கியமான கேள்வி சீனாவோடு சண்டை வருமா? என்பதாகும் நமது தேசத்தின் கிரகநிலையின் அடிப்படையில் பார்த்தால் சண்டை வருவதற்கான சூழ்நிலை மிக குறைவாகவே இருக்கிறது. இரண்டு நாட்டு தலைவர்களும் புலிவாலை பிடித்தது போல தவிக்கிறார்கள் அவர்களது தவிப்பு ராஜதந்திர பேச்சு வார்த்தைகளின் மூலமே முடிவுக்கு வந்துவிடுமென்று நம்புகிறேன். எல்லாமல்ல இறைவனான நாராயணன் உலகத்திற்கு அன்பையும் அமைதியையும் ஆரோக்கியத்தையும் எப்போதும் தருவான்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434


www.aanmeegamalar.com



# குருபூர்ணிமா பயன்களை எவ்வாறு பெறுவது

ஒவ்வொரு ஸாதகரும் தங்களது ஆன்மீக பயணத்தில் இறைவன் தங்களை எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது அனுபவத்தில் உணர்வார்கள். இவ்வாறு வழிநடத்துவது வழிநடத்தும் இறைதத்துவம் ஆகும். இது குருதத்துவம் என்றும் வழங்கப்படுகிறது. இந்த தத்துவம் ஒரு ஸாதகரை ஆன்மீக பயிற்சியில் ஈடுபடும்படி செய்து அவரது ஆன்மீக பயணம் சிறப்புற, படிப்படியாக வழிகாட்டுகிறது. ஒவ்வொரு அடியாக வழிநடத்துகிறது. அதனால்தான் குரு தத்துவம் ஒரு ஸாதகருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இயல்பாகவே இறை நாட்டம் உள்ள ஒரு நேர்மையான ஸாதகர் தனது வாழ்க்கையில் உதவ குருதத்துவம் எவ்வாறு எல்லா வகைகளிலும் வெளிப்பட்டு தோன்றி உதவியது என்பதை அனுபவத்தில் உணர்ந்து நன்றியுணர்வு நிறைந்தவராக இருப்பார். குருதத்துவத்திற்கு நாம் நன்றி சொல்ல எல்லா நாட்களும் நல்ல நாட்களே என்று கருதப்பட்டாலும், வருடத்தில் ஒரு நாளான குருபூர்ணிமா நாள், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இது ஏனெனில் குருபூர்ணிமா தினத்தில் குருதத்துவம் உலகம் முழுவதிலும் ஆயிரம் மடங்கு அதிகமாக செயல்படுகிறது. உண்மையில் குரு தத்துவம் வருட ஆரம்பத்திலிருந்து செயல்பட ஆரம்பித்து குருபூர்ணிமா தினம் வரை அதிகரித்துக் கொண்டே வந்து அன்றைய தினம் மிக அதிக அளவான ஆயிரம் மடங்கு செயல்படுகிறது.

அதாவது ஒருவர் சரியான கண்ணோட்டத்துடன் சரியான முறையில் முயற்சித்தால் ஆன்மீக நிலையில் குருபூர்ணிமா வரையுள்ள காலமும் குருபூர்ணிமா அன்றும் அதிகபட்ச பலனை அவர் அடையலாம். இவ்வருடம் குருபூர்ணிமா **4 ஜூலை 2020**, சனிக்கிழமை அன்று வருகிறது. இக்காலகட்டத்தில் அதிக செயல்பாட்டில் உள்ள குருதத்துவத்தின் மூலம் பயன் பெறுவதற்கான சில வழிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

### கற்றுக் கொள்ளும் மனப்பான்மையுடன் எப்போதும் இருத்தல்

நம் வாழ்வில் சில சமயங்களில் பல வழிகளிலும் சவாலாக இருக்கக் கூடிய சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள நேரிடும். அம்மாதிரி சந்தர்ப்பங்களை, அவை நமக்கு கற்றுத் தரும் படிப்பினை என்ன என்ற மனப்பான்மையுடன் எதிர்கொள்ளும்போது குருதத்துவத்துடன் ஒன்றிணைந்து குருதத்துவம் நமக்கு காண்பிக்கும் விஷயங்களை உணர்ந்து நல்ல பயனை பெற முடியும். ”சந்தர்ப்பங்களே நமக்கு குரு” என்று சொல்லும் ஒரு சொல் வழக்கு உண்டு. எனவே ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதன் மூலம் நமக்கு ஒரு படிப்பினையை கொடுப்பதற்காகவே இறைவனால் உருவாக்கப்படுகிறது என்ற ஆன்மீக உணர்வுடன் எப்போதும் நாம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நிகழ்வின் மூலமும் அவர் என்ன படிப்பினையை நமக்கு கொடுக்கிறார் என்பதை இறைவனிடமே நாம் கேட்கலாம்.

இறைவன் நமக்கு அளித்திருக்கும் விஷயங்களை நினைத்து நாம் நன்றியை வளர்த்துக் கொள்ள வேண்டும் இந்த உலகம் முழுவதையும் படைத்தவர் இறைவனே. இறைவன் நமக்கு உயிரை அளித்து அதை ஒவ்வொரு கணமும் பாதுகாக்கிறார். அவர் நமக்கு தேவையான எல்லாப் பொருள்களையும் அளித்திருப்பதால் நாம் ஆன்மீக பயிற்சியில் கவனம் செலுத்த முடிகிறது. ஆனால் பெரும்பாலான நேரங்களில் நமக்கு இந்த விஷயத்தில் கவனம் இருப்பதில்லை. ஆனால் நாம் அவ்வப்போது இறைவனுக்கு நன்றி செலுத்தும் நோக்கத்தை வளர்த்துக் கொண்டோமானால் அது நமது நன்றியுணர்வையும், நாம் எப்போதும் நன்றி செலுத்தும் ஆன்மீக உணர்வுடன் இருப்பதையும், மேம்பட வைத்து அதன் மூலம் நமக்கு ஆன்மீக முன்னேற்றம் விரைந்து ஏற்படவும் உதவும்.

அளவிலும் தரத்திலும் ஆன்மீக பயிற்சி மேம்பட நமது முயற்சியை அதிகரித்தல்

குருபூர்ணிமா நெருங்கி வரும் இந்த காலகட்டம் ஆன்மீக வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான



காலமாகும். இந்த நேரத்தில் ஆன்மீக பயிற்சிக்கு அதிக முயற்சி எடுத்துக் கொண்டோமானால் குருதத்துவத்தை நம்மிடம் அதிக அளவு ஈர்த்து, அதன் மூலம் அதிக அளவு நன்மைகளை அடைய முடியும். அளவிலும் தரத்திலும் மேம்பட நாம் முயற்சி செய்யலாம். அளவில் வளர்ச்சி என்பதன் பொருள் அதிக நேரம் நாமஜபம் செய்வது, ஆளுமைக் குறைகளைக் களைவதில் அதிக கவனம் செலுத்துவது, ஸத்சேவையில் அதிக நேரம் செலவிடுதல் ஆகியனவை ஆகும். தரத்தில் வளர்ச்சி என்பதன் பொருள் நாமஜபத்தை ஆன்மீக உணர்வுடன் செய்வது, ஸத்சேவையை கூடுமானவரை தவறுகள் நேராமல் கவனத்துடன் திருத்தமாக செய்வது, நேர்ந்த தவறுகளை சம்பந்தமாக மனதை உள்முகப்படுத்தி ஆழ்ந்து கவனித்து இனி தவறுகள் நேராமல் கவனத்துடன் இருப்பது ஆகியன ஆகும்.

### உன்னிடம் என்ன உள்ளதோ அதை இறைவனுக்கு அளித்தல்

இறைவன் நமக்கு என்ன வேண்டுமானாலும் அளிக்க தயாராக இருக்கிறார். ஆனால் அதை பெறுவதற்கு நாம் நம்மை எவ்வாறு தகுதியுள்ளவர்களாக செய்து கொள்வது? நம்மிடம் என்ன உள்ளதோ அதை இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம் அவரது ஆசியை பெறுவதற்கு நம்முள் இடமேற்ப்படுத்திக் கொள்கிறோம். ச்ரத்தையுடன் நமது குறைகளைக் களைய முயற்சிப்பதன் மூலமும் நாமஜபத்தின் மூலமும் நமது மனதையும் இறைவனுக்கு ஸமர்ப்பிக்கலாம். உடலினாலும் புத்தியினாலும் பல்வேறு ஸத்சேவை களில் ஈடுபடலாம். உலக அளவில் ஆன்மீகத்தை பரப்புவதை அடிப்படை கொள்கையாகக் கொண்ட ஆன்மீக ஸ்தாபனங்களுக்கோ மகான்களுக்கோ நமது செல்வத்தை அர்ப்பணிக்கலாம்.

குருபூர்ணிமா நெருங்கும் இந்த நேரத்தில் ஸாதகர்களாகிய நீங்கள் அதிக அளவில் ஆன்மீக பயிற்சி செய்து குருபூர்ணிமாவை ஆனந்த நிலையில் அனுபவிக்க விரும்புகிறோம்!

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# உயிர்ப்பான வாழ்க்கை வலிமையானது

ஆண்டவனால் படைக்கப்பட்ட உலகம் சித்திரம் வரையக் கூடிய மிகப்பெரிய இடம். மனிதன் இதைப் பார்த்து சுகமான வாழ்க் கையை எட்டி பிடிக்கலாம். கூடவே இயற்கைக் காட்சிகளின் வனப்பை பார்த்தும் படித்தும் உணரலாம்.

❖❖❖

நாம் அனைவரும் எதற்காக வந்திருக்கிறோம் தெரியுமா? கடவுள் படைத்த உலகை வைத்து எப்பொழுதும் கற்கவே.

❖❖❖

உலகிலுள்ள ஆணையும் பெண்ணையும் அவர்களின் அழகின் படைப்பை பாராட்டுவதோடு அல்லாமல் எல்லா மதங்களும் அவர்களது மேதாவிலாசத்தையும் புரிந்து கொண்டிருக்கிறது.

❖❖❖



கடமை உணர்ச்சி உள்ள வேலைக்காரர்கள் பணக்காரர்களை காட்டிலும் மிகவும் பணக்காரர்களே. தங்களது அழகிலும் நடையிலும் மயங்கி கொண்டிருக்கின்ற வேலைக்காரர்கள் கடமை உணர்ச்சியோடு கடமை செய்வதில்லை.

❖❖❖

கண்டெடுக்கப்பட்ட ஓர் உயர்ந்த வைரத்தைப் போன்றது விலை மதிக்க முடியாத எனது சொந்த மன அழகு. நான் அதை எப்பொழுது இழக்கிறேனோ அச்சமயத்திலிருந்து எல்லா காலங் களிலும் நான் பிச்சைக்காரனே.

❖❖❖

நாம் அனைவரும் ஆண்டவனிடம் கருணைக்காக பிச்சை எடுக்கின்றவர்கள். அவனிடமிருந்து அக்கருணையை பெற நாம் நமது கடமையை செய்ய வேண்டும்.

❖❖❖

கடவுள் மிகப்பெரியவன் என்ற வார்த்தை ஒன்று இருப்பத னால் கடவுள் பெரியவன் என்று சொல்வதில்லை. அவன் தனது உண்மைத்தன்மையிலேயே பெரியவன். ஏனெனில் இறைவன் உலகிலுள்ள ஒவ்வொரு குழந்தையையும், ஒவ்வொரு ஜீவராசியையும் உடனிருந்து பார்த்துக் கொள்ளுகிறான்.

❖❖❖

உலகத்தில் நிலவ இருக்கின்ற சந்தோஷத்தை மதங்கள் பிரச்சாரம் செய்கின்றன. ஆகவே நீ எந்த குறிப்பிட்ட கடவுளைத் தொழுகிறாய்? அதன் பெயரென்ன என்று என்னை கேட்காதே. வழிபடுகின்ற ஒவ்வொரு தன்மையும் அனைத்து உலகத்திற்கு சமமே.

❖❖❖

உலகின் பொதுவான ஆரோக்கியம் கடவுள், புத்தி அதனுடன் வருகின்ற உயிர்.

❖❖❖

நம்மிடம் உள்ள சக்தி வேறு. கல்வியின் சக்தி வேறு. கல்வி என்ற திறன் தான் சக்தி என்று சொல்லுதல் ஆகாது. ஏனெனில் சொந்த திறன் என்ற சக்தி மனிதனின் பிறப்புரிமையாக அவனுடைய பிறவியுடன் தோன்றுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இது இயற்கையாலும் கடவுளாலும் தரப்படுகின்றது.

❖❖❖

இதில் கல்வியின் பெரும்சக்தி என்பது மனிதனின் திறமை ஆகும். திறமையுள்ள ஒரு மனிதன் ஒரு கல்வியாளனாகத் திகழவும் பிறருக்கு கற்பிப்பவனாகத் திகழவும் முடிகிறது. இதனது மறு விவரத்தின் பெயர் ஆசிரியர் என்று அழைக்கப்படுகிறது.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


ஆன்மிகமலர் மெயில் புக்

# ஸ்ரீ சமர்த்த ராமதாசர்

## வரலாறு



மகாராஷ்டிர மாநிலத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் அவதரித்த ஆன்மிகத் தலைவர்களில் ஒருவர் ஸ்ரீ சமர்த்த ராமதாசர். ஆன்மிகத் தலைவர் என்றாலும் அரசியலிலும் ஈடுபாடு காட்டினார். அன்றைய முகலாயர்களின் தாக்கத்தால் இந்து கலாசாரம் சீரழிவதைப் பார்க்கப் பொறுக்காமல், அதைத் தடுப்பதற்கு அவர் அரசியலிலும் அக்கறை காட்டி வெற்றியும் கண்டார்.

ஸ்ரீ ஆஞ்சநேயரின் அவதாரமாக மஹாராஷ்டிரத்தில் தோன்றி, மாருதியைப் ப்ரத்யட்சமாகக் கண்டு, அவர் மூலமாக சாட்சாத் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் தரிசனத்தைப் பெற்று ‘த்ரயோதசாக்ஷரி’யான ‘ஸ்ரீராம் ஜய ராம் ஜய ஜய ராம்’ என்ற மஹா மந்த்ரத்தை (பதிமூன்று கோடி ஜபித்து) உபதேசித்து பூமியெல்லாம் தழைக்கச் செய்தார்.

மராட்டியத்தின் ஐம்பெரும் மகான்களில் ஒருவர் சமர்த்த ராமதாசர். மற்ற நால்வர்கள் ஞான தேவர், நாம தேவர், ஏகநாதர், துக்காராம் ஆவர். இவர் வாழ்ந்த காலம் சந்த் துக்காராம் வாழ்ந்த காலம்.

### அவதாரம்

சூர்யாஜி பந்த் சூரிய நமஸ்காரம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது குடும்பம், பல தலைமுறைகளாக சூரியன் மற்றும் ராம் ஆகியோரை வணங்குவோர். ஒருநாள் சூரியன் நேரில் வந்து காட்சியளித்து, ""உனக்கு இருபிள்ளைகள் பிறப்பார்கள். ராமன் அம்சத்தோடு ஒருவனும், அனுமன் அம்சத்தோடு ஒருவனும் பிறப்பார்கள்,"என்று கூறிமறைந்தார். ஸ்ரீ சமர்த்த ராமதாசர் ராம்நவமியில் (சைத்ரா மாதத்தில்) 1530 (ஷாலிவஹன சகாப்தத்தில்), பொ.ச. 1608 இல், ஜமாதா கோத்ராவின் தேசஸ்தா ருக்வேதி பிராமண குடும்பத்தில் கோதாவரி ஆற்றின் கரையில், ஜல்னா மாவட்டம், அம்பாத் தாலுகா, ஜம்ப் கிராமத்தில் இரண்டாவது மகனாக பிறந்தார். இந்த கிராமம் கங்கைக்கரையில் அமைந்திருந்தது. இவரது பெற்றோர் சூர்யாஜி பந்த் மற்றும் ரனுபாய். முதல் பிள்ளைக்கு கங்காதரன் என்று பெயரிட்டனர். இரண்டாவது குழந்தையை ராணுபாய் பெற்றெடுத்த போது, சூரியன் வாக்களித்தபடி அனுமனின் அம்சமாக சிறுவாலுடன் இருந்தான். அவன் சற்று வளர்ந்ததும் வால் மறைந்தது. அவனுக்கு நாராயணன் என பெயரிட்டனர்.

### பால்ய பருவம்

மனோதிடமான அவன் குறும்பு மிக்கவனாகவும் இருந்தான். மரம், சுவர் எதுவானாலும் ஏறி குதிப்பான். மகனின் செயல்களை எண்ணி ராணுபாய் கவலைப்பட்டாள். ராம்தாஸுக்கு எட்டு வயதாக இருந்தபோது அவரது தந்தை இறந்தார். அவர் கடவுளின் எண்ணங்களில் மூழ்கி, கடவுளை எவ்வாறு சந்திப்பது என்பதைக் கண்டுபிடிக்க முயன்றார். சிறுவயதிலேயே தமக்கு காயத்ரி மந்திரம் தவிர வேறு ஏதேனும் ஒரு மந்திரம் உபதேசம் செய்து வைக்க வேண்டும் என்று தனது அண்ணாவிடம் கேட்க, அவரும் காலம் வருகையில் உபதேசம் செய்து வைப்பதாகக் கூறியிருக்கிறார். தனது மன உந்துதலால் வீட்டுக்கு அருகில் இருக்கும் ஹனுமன் கோவிலில் நாட்கணக்கில் அன்னபானம் ஏதும் இன்றி தியானத்தில் அமர்ந்து விடுகிறார்.

### திருமண நிகழ்வு

வேத பாராயணம் போக மற்ற நேரங்களில் ஹனுமன் சன்னதியில் ஆழ்நிலை தியானத்தில் இருப்பதும், எப்போதும் ராமநாம ஜபமுமாக இருப்பதைக் கண்ட சகோதரர் நாராயணனுக்கு திருமணம் செய்விக்க முடிவு பண்ணுகிறார். 12 வயதில், அவர் தனது திருமண விழாவின் போது மேடையில் நின்று கொண்டிருந்தபோது, “சவதன்” என்ற வார்த்தையை உள்ளடக்கிய திருமண மந்திரங்களை பிராமணர்கள் கோஷமிடுவதைக் கேட்டார். இந்த வார்த்தைக்கு “ஜாக்கிரதை” உள்ளிட்ட பிற அர்த்தங்களும் உள்ளன! அதைக் கேட்டவுடனேயே அதன் அர்த்தம் என்னவென்று அவருக்குத் தெரியும், அங்கிருந்து தப்பி ஓடி புனித நகரமான நாசிக் நகருக்குச் சென்றார், அங்கு அவர் குடில் அமைத்துக் கொண்டு, பிக்ஷை எடுத்து வாழத் தொடங்குகிறார்.

ஸ்ரீ ராம தரிசனம், சமர்த்த என்ற பட்டம், ஸ்ரீராம த்ரயோதசாக்ஷரி இவ்வாறு தீவிர பிரம்ஹசரிய வாழ்கை வாழும் காலத்தில் பஞ்சவடிக்கு அருகில் 12 வருடம் தவம் செய்து ராம மந்திரத்தை மூன்றரை கோடி முறை ஜபம் செய்து மஹாமந்திரமான காயத்ரியையும், ஸ்ரீராம த்ரயோதசாக்ஷரி (ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்) மந்திரத்தையும் மூன்று கோடி முறை ஜபித்து அதன் மூலம் ராமச்சந்திர மூர்த்தியின் தரிசனம் பெறுகிறார். "அன்பனே! நீ அனுமனின் அம்சம். இனி நீ "சமர்த்த ராமதாஸர்' என நீ அழைக்கப்படுவாய். உன்னால் இந்த உலகத்தில் ஆகவேண்டிய காரியங்கள் ஏராளம் இருக்கின்றன. ஸனாதன தர்மத்திற்கு அந்நியர்களால் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைத் தக்க நபர்கள் மூலம் தடுத்து தர்மத்தை மீண்டும் நிலைநாட்டு" என்று உத்தரவிட்டார் ராமபிரான். நான் காட்டிற்குச் சென்றபோது கட்டிய வஸ்திரத்தையும் உனக்கு அளிக்கிறேன்," என்றார். மந்திர உபதேசம், வஸ்திர தீட்சையை வழங்கினார். இந்த வஸ்திரம் இன்றும் இவரது சமாதிக் கோவிலில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆஞ்சநேயரும் தன் பங்கிற்கு ராமதாசருக்கு சரணாகதி மந்திரத்தை உபதேசித்தார். ஸ்ரீ ராமரின் உத்தரவின் பேரிலேயே பாரதம் முழுவதும் பயணப்பட்டு த்ரயோதசாக்ஷரி மந்திரத்தை பரப்ப முடிவு செய்கிறார்.

சமர்த்தர் ஒரு சமயம் ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் செய்து கொண்டு இருந்தார். யத்ர யத்ர ரகு நாத கீர்த்தனம் தத்ர தத்ர ஹனுமத் ஸேவிதம் கூப்பின கரங்களுடன் கண்ணில் ஆனந்த பாஷ்பம் நீர் ததும்ப ராமாயண உபன்யாசத்தை ஒரு பிராமண வேடம் தரித்து அமர்ந்து கேட்டு கொண்டு இருந்தார். அஸோக வனத்தின் வர்ணனை சொல்லி கொண்டு இருந்தார் அது சமயம் அங்கு பூத்திருக்கும் பூக்கள் தும்பை பூவை போல வெள்ளை நிறத்தில் அனைத்து பூக்களும் பூத்து குலுங்கின என்று கூறினார். அது சமயம் ஹனுமான் கூறினார் ஸ்வாமின் தவறாக சொல்கிறீர் அங்கு பூத்த புஷ்பங்கள் எல்லாம் சிவப்பு நிறங்களாக இருந்தது நன்னா பார்த்து வாசியும் என்றார்.

சமர்த்தர் நீர் ராமாயணம் கேட்க தானே வந்தீர் அமைதியாக கேளும் குறுக்கே பேசாதீர் வால்மீகி எழுதினதை தான் சொல்றேன் என்றார். உடனே ஹனுமான் கோபம் கொண்டு ஓய் நான் தான் அனுமான் அசோகவாடி நேரே போய் பார்த்தவன் என்ன சொல்றீர் என்றார்.

உடனே சமர்த்தர் யோசித்தார் இது நல்ல சமயம் இவரை வைத்து ராமர் தரிசனம் செய்து டலாம் என்று நினைத்து மேற்படி கூறினார். ஏன் சந்தேகம் ராமரையே கேட்கலாமே என்றார் உடனே ராமரிடம் ராமதாஸரை அழைத்து போய் சந்தேகத்தை சொன்னார்கள். ராமரோ எல்லம் தெரிந்தும் ஹனு மானிடம் நான் அங்கு போகவில்லை சீதை


ஆன்மிகமலர் மெயில் புக்

தான் இருந்தால் அவளை கேட்கலாம் என்றார். சீதை ஆமாம் அங்கு பூத்த புஷ்பங்கள் எல்லாம் நீல நிறத்தில் தான் இருந்தது. சிகப்பும் இல்லை வெளுப்பும் இல்லை என்றாள்.

அனுமானோ விடவில்லை தாயே அங்கு பூத்தது சிகப்பு தான் என்றார். ராமர் எதற்க்கும் வால்மீகி முனிவரையே கேட்கலாம் என்றார். அனைவரும் வால்மீகி ஆஸ்ரமம் சென்று சந்தேகத்தை கேட்டனர். வால்மீகி ரிஷி அனைவரையும் அன்புடன் வரவேற்றார். அனுமானிடம் சாந்தமாக எடுத்துரைத்தார்.

ஹனுமான் நீ அஸோகவாடியில் ராக்ஷஸர்களை பார்த்ததும் கோபகனல் பறந்தது இவர்கள் அனைவரையும் அழித்து இந்த வனத்தையும் அழிப்பேன் என்று ஆவேசமாக சொன்னாய் அது சமயம் உன் கண்கள் சிவந்து இருந்ததால் எல்லாம் சிவப்பாக இருந்தது என்றார்.

சரி மாதாவின் கண்களுக்கு ஏன் நீலநிறமாக தெரிந்தது என்றார் அனுமான் சீதை ராமரை பிரிந்த தாபத்தில் கண்கள் அழுது அழுது கண்ணீர் நீலம் பூத்து விட்டது ஆதலால் அவள் கண்ணுக்கும் நீலமாக தெரிந்தது. ஆக அங்கு பூத்த மலர்கள் யாவும் ராமனை போன்று வெளுத்த மனதாக வெள்ளை நிறத்தில் இருந்தது. என்று கூறினார். இது சமயம் சமர்த்தர் குரு ராமதாஸர் ராம சீதா சஹிதமாக ஹனுமானை ஸாஷ்டாங்கமாக விழுந்து ஸேவித்தார்.

"என் பக்தனான நீ எப்போது நினைத்தாலும், அப்போதெல்லாம் உன் முன் தோன்றுவேன்!" என்று வாக்களித்துவிட்டு மறைந்தார். ராமதாசர் தினமும் 'ஜயரகுவீர' என்று ஜபித்தபடியே சாலைகளில் செல்வார். பக்தர்கள் கொடுக்கும் தானியத்தை கல்லில் வைத்து அரைத்து மாவாக்கி நெருப்பு மூட்டி இரண்டு ரொட்டி சுட்டு சாப்பிடுவார்.

### ஸ்ரீ தத்த தரிசனம்

ராம்தாஸுக்கு மஹுர்காட்டில் உள்ள ஸ்ரீ தத்தாத்ரேயாவிடம் இருந்து தரிசனம் கிடைத்தது.

### ஸ்ரீ பாண்டுரங்கன் ஸ்ரீ ராமனாக தரிசனம்

ஒரு நாள் பக்தர் குழுக்களுடன் பண்டரிபுரம் சென்றார். அங்கு ஸ்ரீ விட்டல் அவருக்கு ஸ்ரீ ராமராக தரிசனம் அளித்தது அவரை ஆட்கொண்டார்.

அடுத்த இதழில்...

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593



# வாழைப்பழங்களும் மும்மூர்த்திகளின் அவதாரங்களும்

பொதுவாக எந்த பூஜை செய்தாலும் பிரதானமாக படைக்கப்படுவது வாழைப்பழம் மட்டுமே, வாழையில் பல வகைகள் இருந்தாலும், கடவுளுடன் நேரடியாக தொடர்புடைய நான்குவித பழங்கள் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

இந்த நான்கு வகை பழங்களையும், இந்திரன்பழம், பிரம்ம பழம், விஷ்ணு பழம், சிவன் பழம் என்று புராணங்கள்குறிப்பிடுகின்றது.

இந்த நான்குவகை வாழைப்பழங்களுடன் இறைவனை இணைத்து கூறப்படுவதன் காரணத்தைப் பற்றி தெளிவாக பார்ப்போம்.

பிரம்மா இவர் விஷ்ணுவின் தொப்புள் தாமரையில் தோன்றியவர். இவருக்கு அன்னையில்லை.

விஷ்ணு அனாதியானவர். ஆதி என்று ஒன்று இல்லாதவர். பத்து அவதாரங்கள் எடுத்த போதிலும் அன்னையின் பரிபூரண அரவணைப்பைப் பெறாதவர்.

ராமாவதாரத்தின் போது ராமர் ராஜகுமாரனாக வளர்ந்ததனால், அன்னையிடம் இருந்ததை விட, மற்றவர்களிடம் இருந்ததே அதிகம்.

கிருஷ்ணராக அவதாரம் செய்த போது, பெற்ற தாயான தேவகியை விட, வளர்த்த யசோதையிடம் அதிக அன்பு பெற்றவர்.

சிவன் இவருக்கும் பிறப்பு என்று ஒன்றே இல்லை.

சிவன் சிலை வடிக்கும் போது, தொப்புள் இல்லாமலே சிவனை வடிப்பார்கள்.

ஏனெனில், இவர் தொப்புள் கொடி உறவில் பிறக்கவில்லை என்பதை உணர்த்துவதற்காக



தொப்புள் இல்லாமலே சிவன் சிலையை வடிப் பார்கள்.

விஷ்ணு எடுத்தது "அவதாரம்" (பிறப்பு முதல் இறப்பு வரை உண்டு) எனில் சிவன் எடுத்தது "அவஸரம்" (பக்தர்களுக்கு காட்சி தந்து விட்டு மறைந்துவிடுதல்).

சிவன் தாமே முன் வந்து "அம்மே" என்று அழைத்தது காரைக்கால் அம்மையாரை மட்டுமே!

**பிரம்மா, விஷ்ணு, சிவன் இந்த மூவருக்கும் ஒரு சமயத்தில், நாம் யாருக்காவது குழந்தையாக மாட்டோமா என்ற நினைப்பு வந்துள்ளது.**

தாயின் பரிபூரண அரவணைப்பில் அணைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியவுடன், மூவரும் தமக்கு ஒருவர் தாயாக, பக்தி சிரத்தையில் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்க முனைந்தனர்.

அவர்கள் கண்களில் ஒரு ரிஷி பத்தினி தெரிந்தாள். அவள்தான் அனசூயை.

அனசூயை மஹா தபஸ்வினி. அத்ரி மஹரிஷியின் தர்ம பத்னி.

அத்ரி மஹரிஷியின் தவத்தில் பெரும் உதவிகள் செய்து, தாமும் சதா சர்வ காலமும் பக்தி சிரத்தையுடன் இருந்தாள்.

அத்ரியும் அனசூயையும் தங்களுக்கு முப்பெருந்தேவர்களின் அம்சங்களாக ஒரு குழந்தை வேண்டும் என்றும் ஏற்கனவே வரம் பெற்றிருந்தார்கள்.

அந்த வரத்தை மெய்ப்பிப்பதற்காக பிரம்மா, விஷ்ணு, சிவன் அத்ரி அனசூயை தம்பதியரிடம் குழந்தையாக வளர சித்தம் கொண்டார்கள்.

அதன்படி, பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும்


ஆன்மிகமலர் மெயில் புக்



ஒரு நாள் அத்ரியின் ஆசிரமம் சென்று, அநஸூயையைத் தாயாகப் பெற வேண்டி நின்றார்கள்.

அநஸூயையும் பெரும் மகிழ்வு கொண்டு, தன் கணவரின் கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தைக் கொண்டு மூவரையும் சிறு குழந்தையாக்கினாள்.

அநஸூயை தாயாக, முப்பெருந்தேவர்களும் மூன்று குழந்தைகளாக அத்ரி ஆசிரமத்தில் மிக மகிழ்வாக இருந்து வந்தனர்.

அநஸூயையின் அளவற்ற, எல்லைகள் இல்லாத, களங்கம் எதுவும் இல்லாத நிர்மலமான, நிர்வாணமான அப்பழுக்கற்ற பாசத்தினை குழந்தைகளான பிரம்ம விஷ்ணு சிவன் அனுபவித்து வந்தனர்.

நெடுநாட்களாக பிரம்மன் இல்லாமல் பிரம்ம லோகம் இருண்டது.

விஷ்ணுவின் வைகுந்தம் வெறிச்சோடியது.

ஈஸ்வரனின் கைலாயம் இயல்பாக இல்லை.

பிரம்மாவின் தேவியாகிய சரஸ்வதியும், விஷ்ணுவின் தேவியாகிய லக்ஷ்மியும், சிவனின் தேவியாகிய பார்வதியும் தமது கணவர்களைத் தேடியலைந்தனர்.

வெகுநாட்கள் தேடிய பின்னர் மூவரும் அத்ரியின் ஆசிரமத்தில் இருப்பதைக் கண்டறிந்தனர்.

முப்பெருந்தேவியர்களும் தமது கணவர்களை அழைத்துச் செல்ல அத்ரியின் ஆசிரமத்தை அடைந்தனர்.

இவர்களின் வருகை குழந்தைகளாக இருந்த மூவருக்கும் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) அதிர்ச்சி யளித்தது.

அன்னை அநஸூயையைப் பிரிய மனம் இல்லாதவர்கள் ஆனார்கள்.

குழந்தை வடிவில் இருந்த பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும், தங்களைத் தாய் அநஸூயையிட மிருந்து இருந்து பிர்த்து விடுவார்களோ என்ற எண்ணி, மூவரும் அத்ரியின் ஆசிரமத்திற்குப் பின்னிருந்த வாழைத் தோட்டத்தில் மறைந்து கொண்டனர்.

ஒவ்வொருவரும் ஒரு வாழை மரத்தின் பின் ஒளிந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் ஒளிந்துகொண்ட வாழை மரம் அவர்களின் அம்சம் பெறலாயிற்று.

பிரம்மா மறைந்துகொண்ட வாழை மரத்தி லிருந்து பெறக்கூடிய வாழைப்பழம் தான் பூவன் பழம்.

பூவன் பூவில் அமர்பவன். பிரம்மா பூவில் அமைந்திருக்கக் கூடியவர். பூவன் பழமே பிரம்ம பழம்.

விஷ்ணு மறைந்துகொண்ட வாழை மரத்தி லிருந்து பெறக்கூடிய வாழைப்பழம் தான் முகுந் தன் பழம் அல்லது மொந்தன்பழம்.

விஷ்ணுவுக்கு முகுந்தன் என்ற பெயரும் உண்டு. மொந்தம்பழமே விஷ்ணு பழம்.

சிவன் மறைந்துகொண்ட வாழை மரத்திலிருந்து பெறக்கூடிய வாழைப்பழம் தான் பேயன்பழம்.

சிவபெருமான் ருத்ரபூமியாகிய பேய்கள் உலாத்தக் கூடிய சுடுகாட்டில் உறைபவர். அவ ருக்கு பேயாண்டி என்ற பெயரும் உண்டு. பேயன்பழமே சிவப் பழம்.

பிரம்ம, விஷ்ணு, சிவன் மறைந்து கொண்ட வாழை மரங்களிலிருந்து பெறக்கூடியது தான் பூவன் பழம், மொந்தன்பழம், பேயன்பழம் ஆகும்.

இதற்கிடையில் சரஸ்வதி, பார்வதி, லக்ஷ்மி மூவரும் அத்ரியின் ஆசிரமத்தை அடையும் முன்பாக, தேவ நாயகனாகிய இந்திரனை அழைத்து, தமது கணவர்களை அழைத்துவரச் சொன்னார்கள்.

இந்திரனும் அத்ரியின் ஆசிரமம் அடைந்து, விபரம் அனைத்தையும் அறிந்து, அவனும் தாய்ப் பாசத்தினைப் பெற வேண்டி, தானும் ஒரு குழந்தையானான்.



இந்திரனைக் காணாமல் நெடுநேரமாகியதைக் கண்ட தேவியர் நேரில் ஆசிரமம் வர, இந்திரனும் வாழைத் தோட்டத்தில் உள்ள ஒரு வாழை மரத்தில் ஒளிந்து கொள்கின்றான்.

தேவியர் மூவரும் விபரம் அறிந்து, ஆசிரமத்தில் இருக்கும் வாழைத் தோட்டத்திற்கு நுழைகையில் இவர்களின் கண்களில் முதலில் பட்டது இந்திரன் தான்.

இந்திரனின் அம்சமாக இருந்த குழந்தையை இவர்கள் அழைக்க, இந்திரன் வடிவில் இருந்த குழந்தை, அன்னையின் பாசத்திற்குக் கட்டுண்டு தான் இந்திரன் இல்லை (ந: இந்திரன்) என்றது.

இந்திரன் நின்ற வாழைமரத்திலிருந்து பெறப்படுவது தான் நேந்திரன் பழம்.

இந்திரனும் குழந்தையானதால், தாங்களே களம் இறங்கி, முப்பெருந்தேவியரும் அநஸூயையிடம் அத்ரியின் ஆசிரமத்தில் குழந்தைகளாக இருந்த தங்கள் கணவர்களை திரும்ப அனுப்புமாறு மன்றாடினர்.

அநஸூயைக்கு குழந்தைகளைப் பிரிய மன மில்லை. குழந்தைகளுக்கும் அன்னையைப் பிரிய மனமில்லை.

பாசக் கயிறு குழந்தைகளையும், அன்னையை யும் பிணைத்திருந்தது.

அநஸூயை நெஞ்சம் கனக்க பிரம்ம, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் சுய ரூபம் அடைய அனஸூயை பிரார்த்தனை செய்தாள்.

அதன்படியே மூவரும் தங்கள் தனித்த உருவம் அடைந்தனர்.

மஹாவிஷ்ணுவிடம் அநஸூயை பெற்ற வரத்தின் படி, பிரம்ம அம்சம், விஷ்ணு அம்சம், சிவாம்சம் இணைந்ததான குழந்தையை மும் மூர்த்திகளும் உருவாக்கி, அத்ரியிடம் தத்தம் (வழங்குவது) அளித்தனர், அவர் தத்தாத்ரேயர் என்ற பெயரில் அழைக்கப்பட்டார்.

மேற்கண்ட படி ஒவ்வொரு இறைவனுக்கும் உரிய பழத்தை அவர்களுக்குரிய பூஜையில் பயன்படுத்தினால் நன்மை


**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 08825844033.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)-ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**